நல்லவனும் நய வஞ்சகனும்

பழனியப்பா பிரதர்ஸ்

நல்லவனும் நயவஞ்சகனும்

தமிழாக்கம் :
ப. ராமஸ்வாமி

பழனியப்பா பிரதர்ஸ்
சென்னை - 600 014 திருச்சி - 620 002
சேலம் - 636 001 கோயமுத்தூர் - 641 001
மதுரை - 625 001 ஈரோடு - 638 001

முதற்பதிப்பு—1964
இரண்டாம் பதிப்பு—1969
மூன்றாம் பதிப்பு—1975
நான்காம் பதிப்பு—1982

விலை : ரூ. 2-80

ஏஷியன் அச்சகம்,
சென்னை - 600 014.

இந்தக் கதை

அரபுக் கதைகளிலே நாங்கள் வெளியிட்டிருக்கும் **'சிந்துபாதின் கடல் யாத்திரைகள்', 'அலாவுத்தீனும் அற்புத விளக்கும்' 'அலிபாபா', 'நல்லவனும் நயவஞ்சகனும்'** ஆகிய நான்கும் '1,001 இரவுகள்' அல்லது 'அராபியர் நிசிக் கதைகள்' என்ற நூலைச் சேர்ந்தவை.

சிந்துபாதின் ஏழு யாத்திரைகளையும், அவன் அடைந்த துன்பங்களையும் துயரங்களையும் முடிவில் செல்வமும் செழிப்பும் பெற்று, அவன் உயர்ந்த நிலையில் வாழ்வதையும் முதற்புத்தகம் விளக்குகின்றது.

ஏழைச் சிறுவனான அலாவுத்தீன், அற்புத விளக்கு ஒன்றின் உதவியால், மாட மாளிகையும்; எண்ணற்ற நிதிகளும் பெற்று, சுல்தான் மக்களையும் மணந்துகொண்டு, அரசனாவதைக் கூறுகிறது **'அலாவுத்தீனும் அற்புத விளக்கும்'** என்ற கதை.

நாற்பது திருடர்களை எதிர்த்து வெற்றி கொண்டு, பெருஞ் செல்வங்களைப் பெற்று, வாழ்நாள் முழுதும் கவலையில்லாமல் ஆனந்தமாக வாழும் விறகு வெட்டியின் வரலாற்றை **'அலிபாபா'** வின் கதை விவரிக்கின்றது.

இந்த **'நல்லவனும் நயவஞ்சகனும்'** ஒரு தனி இனத்தைச் சேர்ந்தது. ஒருவன் உண்மையான நண்பன்; அவனுடன் சேர்ந்த மற்றவன் தீயவன். தீமையே செய்து வருபவனுக்கும் நன்மையே செய்கிறான் நல்லவன்.

'எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம், உய்வில்லை
செய்ந்நன்றி கொன்ற மகற்கு'

என்ற குறளின்படி தீயவனுக்கு உய்வில்லாமற்போகின்றது. நம்மோடு வாழும் மக்களிடத்தில் அன்புகொண்டு, அவர்களுக்கு உதவிகள் செய்து வருவதே உயர்ந்த அறம் என்பதை இக்கதை நன்கு எடுத்துக்காட்டுகின்றது.

பழனியப்பா பிரதர்ஸ்

உள்ளுறை

1.	சாயக்காரனும் மருத்துவனும்	....	1
2.	கடல் யாத்திரை	....	7
3.	நன்றி மறந்த சாயக்காரன்	....	13
4.	அபு கிர்ரின் அதிருஷ்டம்	....	19
5.	அபு ஸிர் கட்டிய ஹம்மாம்	....	28
6.	வஞ்சனையால் வந்த கேடு	....	37
7.	சாயக்காரனின் சாயம் வெளுத்தது	....	44

1. சாயக்காரனும் மருத்துவனும்

எகிப்து தேசத்தில் அலெக்சாந்திரியா நகரில் இரண்டு நண்பர்கள் இருந்து வந்தனர். ஒருவன் சாயம் காய்ச்சுபவன், அவன் பெயர் அபு கிர்; மற்றவன் முடி சிங்காரிக்கும் மருத்துவன். அவன் பெயர் அபு ஸிர். இருவரும் கடைத்தெருவிலே கடைகள் வைத்திருந்தனர். இரண்டு கடைகளும் ஒன்றை ஒன்று அடுத்திருந்தன.

சாயக்காரன் பொய்யன், ஏமாற்றுக்காரன், அவன் தொழிலைச் சரியாகச் நடத்துவதில்லை. பித்தலாட்டம் செய்வதே அவன் கொள்கையாயிருந்தது. மக்களை ஏமாற்றுவதில் அவன் கூச்சமோ, வெட்கமோ கொள்வதில்லை. எவராவது துணியைச் சாயத்தில் முக்குவதற்காகக் கொணர்ந்து கொடுத்தால், அவன் முதலிலேயே கூலியை வாங்கிக்கொள்வான். வாடிக்கைக்காரர் வெளியே போனவுடனேயே, அவன் வாங்கிய

பணத்திற்குச் சிற்றுண்டிகளும், மதுவும் வாங்கி அருந்திவிடு வான். பின்னர், வாங்கி வைத்த துணியை விற்று, கிடைத்த காசையும் செலவழித்துவிடுவான். எவ்வளவு பணம் வந்தாலும், அவனுக்குப் போதாது; உருசியுள்ள பண்டங்களில் அவனுக்கு விருப்பம் அதிகம்; மது வகைகளிலும் உயர்ந்தவைகளையே அவன் வாங்கிக் குடிப்பான். இந்த நிலையில் துணி கொடுத்தவர் திரும்ப வந்து, வேலை முடிந்துவிட்டதா என்று கேட்டால், "நாளைக் காலையில், பொழுது விடியுமுன்னால் வாருங்கள், துணியில் சாயமேற்றி வைக்கிறேன்!' என்று அவன் சொல்லி யனுப்புவான். வந்தவர், 'இன்று, நாளை என்று இவரிடம் அலைவதுதான் மிச்சம்!' என்று சொல்லி வருந்திக்கொண்டே போவார். மறுநாள் அவர் குறித்த நேரத்தில் வந்து கேட்டால், 'நாளை வாருங்கள்! நேற்று நான் சாயம் காய்ச்சவில்லை. வீட்டில் விருந்தாளிகள் வந்திருந்தனர். நாளைக் காலை, பொழுது புலருமுன்பே வந்து வாங்கிப் போங்கள்!' என்பான். மூன்றாம் நாளும் அவர் வந்து கேட்டால், 'வீட்டில் என் மனைவிக்கு உடம்பு சரியாயில்லை. அவளுக்கு வைத்தியம் செய்யவே நேரம் சரியாகப் போய்விட்டது. நாளை கண்டிப்பாக வேலை முடிந்துவிடும், வந்து சாயமேற்றிய துணியை வாங்கிக் கொள்ளுங்கள்!' என்று சொல்லி, அவன் அவரை வழியனுப்பி வைப்பான். நான்காம் நாளும் அவர் தொடர்ந்து வந்துவிட்டால், அன்றும் அவன் புதிதாகச் சாக்குப் போக்குச் சொல்லி, மறுநாள் வரும்படி கேட்டுக்கொள்வான். வாடிக்கைக்காரர், 'நாளை, நாளை' என்று அவன் சொல்லுவதில் வருத்தமடைந்து, 'என் துணியையாவது திருப்பிக்கொடும்!' என்று கண்டிப்பாகக் கேட்டால், அபு கிர், 'அன்பரே! உங்களுடைய துணியைச் சாய மேற்றிக் கொடியில் உலர்த்தி வைத்திருந்தேன். எவனோ அதையும், அத்துடனிருந்த மற்றைத் துணிகளையும் அடித்துக் கொண்டு போய்விட்டான். உங்களைப் பார்க்கவே எனக்கு வெட்கமாயிருக்கிறது. மக்களை இப்படி ஏமாற்றித் திருடுகிற வர்களை ஆண்டவன் சும்மா விடமாட்டான்!' என்பான். வாடிக்கைக்காரர் நல்லவராயிருந்தால், 'ஐயோ, பாவம்! உனக்கு இப்படி நஷ்டம் வரலாமா?' என்று வருத்தப் பட்டுவிட்டுப் போய்விடுவார். அவர் முரடராயிருந்தால்,

வாய்க்கு வந்தபடி அவனை ஏசி, நீதித்தலத்தில் அவனைக் கொண்டுபோய் நிறுத்துவதாகப் பயமுறுத்திவிட்டுப் போவார். நீதித் தலத்தில் வழக்குத் தொடுத்தவர்களில், அபு கிர்ரை வென்ற வர்களே இல்லை. எந்த வகையிலும் அவனிடம் கொடுத்த துணி யானை வாயில் கொடுத்த கரும்புதான்— அது திரும்பி வந்ததே இல்லை !

இவ்வாறு நெடுங்காலமாக அவன் மக்களை ஏமாற்று வதையே தொழிலாய்க்கொண்டிருந்ததால், நாளடைவில் அவனுடைய மோசடியைப்பற்றி ஊரெங்கும் தெரியலாயிற்று. வாடிக்கைக்காரர்கள் தங்களுக்குத் தெரிந்தவர்களுக்குச் சொல்லி, அவர்கள் மற்றவர்களுக்குச் சொல்லி, நகரிலே 'அபு கிர் வேலை' என்றால் என்ன என்பது எங்கும் பிரசித்த மாகிவிட்டது. நாளடைவில் அவனுடைய கடைக்கு ஆட்களே வருவதில்லை. அவனைப்பற்றிய விவரம் தெரியாத யாரேனும் ஒருவர் இடையிடையே அவனிடம் சிக்கிக்கொண்டு அல்லற்படுவதைத் தவிர, அவனுடைய தொழில் பாழாகப் போய்விட்டது.

தொழிலை நடத்த முடியாத அபு கிர், பெரும்பாலும் பக்கத்துக் கடையாகிய அபு ஸிர்ரின் முடி சிங்காரிக்கும் நிலையத்திற்கும் போய் உட்கார்ந்துகொண்டு, அங்கிருந்தபடியே தன் கடையின் வாயிலைப் பார்த்துக்கொண்டேயிருப்பான். முன்னால் துணி கொடுத்தவர் எவரேனும் தன் கடைப்பக்கம் வந்து நின்றால், அவன் முகத்தை வேறு பக்கமாகத் திருப்பிக்கொண்டுவிடுவான்; வந்தவர் சாயக்காரனைக் காணவில்லையென்று திரும்பிப் போய் விடுவார். புதிதாக விவரம் தெரியாத எவரேனும் கையிலே துணியுடன் வந்து நின்றால், அவன் உடனே எழுந்து சென்று, 'என்ன வேண்டும்?' என்று கேட்பான். வந்தவர் சாயம் தோய்க்க வேண்டும் என்றால், என்ன வர்ணம் என்று கேட்டுத் தெரிந்துகொள்வான். உடனே கூலியையும் முன்னதாக வாங்கிக் கொள்வான். ஆசாமி கடையைவிட்டுக் கிளம்பியதும், தானும் வெளியேறி, சந்தைக்குச் சென்று, அவன் கொடுத்த துணியை விற்று, குடித்துவிடுவான். இவ்வாறு துணி கொடுத்தவர்களுக்கு, நடந்து நடந்து, பிணிதான் மிஞ்சும். ஆனால், அபு கிர் தொழில் தெரியாதவனும் அல்லன்; பல நிறச் சாயங்கள் காய்ச்ச

அவனுக்குத் தெரியும். உருட்டும் புரட்டும் இல்லாமல், அவன் இருந்து முறையாகத் தொழில் செய்வதானால், எவ்வளவோ செல்வம் தேடியிருக்க முடியும். அதை விட்டுவிட்டு, அவன் ஏமாற்றுவதையே தொழிலாகக் கொண்டிருந்தான்.

எவ்வளவு கெட்டிக்காரனாயினும், ஒருவன் சிலரைச் சில காலங்களில் ஏமாற்ற முடியும்; ஆனால், ஒருவன் எல்லோரையும், எல்லாக் காலங்களிலும் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியுமா? ஒரு சமயம் பணம் படைத்த முரடன் ஒருவன் அபு கிர்ரிடம் சாயம் தோய்க்கத் துணிகள் கொடுத்திருந்தான். அவனிடம் அபு கிர் 'நாளை நாளை' என்று வாயிதா போட்டு, பின்னர் அவன் கண்ணிலேயே படாமல், பக்கத்துக் கடையில் மறைந்துகொண்டான். அவனிடம் வாங்கியிருந்த துணிகளை, வாங்கிய அன்றே அவன் ஏப்பம் போட்டுவிட்டான்! பணக்காரன், நடந்து நடந்து கால் ஓய்ந்தபின், நகர காஜியாரிடம்* பிராது கொடுத்தான். அவனுக்கு அனுகூலமான தீர்ப்புக் கிடைத்தவுடன், அவன் காவல் அதிகாரிகளுடன் சாயக்கடைக்கு வந்தான். அங்கே சில உடைந்த சட்டி பானைகளைத் தவிர வேறு விலை மதிப்புள்ள பொருள் எதுவுமில்லாததால், அதிகாரிகள் கடையை அடைத்து, முத்திரை வைத்துவிட்டார்கள். அவர்கள் போகுமுன் அண்டையிலிருந்த கடைக்காரர்களிடம், 'சாயக் கடைக்காரன் அபு கிர் வந்தால், இதோ நிற்கும் கனவானுடைய துணிகளைக் கொண்டுவந்து காவல் நிலையத்திலே கொடுத்துவிட்டு, கடைச்சாவியை வாங்கிக்கொள்ளும்படி சொல்லுங்கள்!' என்று தெரிவித்தார்கள்.

சிறிது நேரத்திற்குப் பின் அபு கிர் சவரக் கடைக்கு வந்ததும், அபு ஸிர் அவனிடம், 'அந்தக் கனவானுடைய துணிகள் என்ன ஆயின?' என்று கேட்டான்.

'அவை களவு போய்விட்டன!'

'வருடக்கணக்காக உன் கடையில் துணிகள் எல்லாம் களவு போனதாகவே இதுவரை சொல்லி வந்திருக்கிறாய். அப்படியானால் நகரிலுள்ள திருடர்கள், வம்பர்கள் எல்லோருமே உன்கடையை வைத்துத்தான்பிழைக்கிறார்கள்போலிருக்கிறது!

---

* காஜி - நீதிபதி.

ஏன் இப்படிப் பொய் சொல்லிக்கொண்டேயிருக்கிறாய்? இது ஒரு தொழிலா? இப்பொழுது உண்மையாகச் சொல்லு. கன வானுடைய துணிகளை எங்கே வைத்திருக்கிறாய்?'

'அவைகளை விற்று உணவுப் பண்டங்கள், மது முதலியவை வாங்கிவிட்டேன். என்னிடம் வரும் துணிகளையெல்லாம் இப்படித்தான் விற்றுத் தீர்த்துவிட்டேன். இதில் ஒன்றும் புதுமையில்லை! என் வழக்கமே இதுதான்!'

'மக்களுடைய பொருள்களை வஞ்சனையாகக் கவர்வதை ஆண்டவன் அனுமதிப்பானா? ஒரு நாள் அவனுக்கு நாம் பதில் சொல்லித்தானே ஆக வேண்டும்!'

'நான் ஏழை. ஏழையால் வேறு என்ன செய்ய முடியும்? கை நிறையப் பொருள் இருந்தால், சாமான்கள் எல்லாம் வாங்கி, வைத்துக் கடையை விருத்தி செய்ய முடியும். மேலும், நாளுக்கு நாள் தொழில் மந்தமாகிவிட்டது. நானே கடையைப் பூட்ட வேண்டிய நேரத்தில், நல்ல வேளையாக அதிகாரிகளே வந்து பூட்டிவிட்டார்கள்!'

'அப்படியானால் வேறு என்ன செய்ய யோசிக்கிறாய்? எவ் வளவோ நேர்மையாக உழைத்தும், என் நிலைமையும் வர வர மோசமாகிவிட்டது. ஏழைமைதான் எனக்கும் காரணம். தொழிலில் நகரில் எனக்கு நிகரான திறமையுள்ளவர் கிடையாது. நான் எவ்வளவோ சிரத்தையுடன் உழைத்து வருகிறேன். ஆயினும், இப்பொழுது என் கடைக்கு அதிகமான ஆட்கள் வருவதில்லை. நானும் மேற்கொண்டு என்ன செய்யலாம் என்பது பற்றியே யோசித்துக்கொண்டிருக்கிறேன்!'

அபு கிர், தன் நண்பன் தன் வழிக்கு நெருங்கி வந்துவிட் டான் என்பதை உணர்ந்து, அதற்குத் தக்கபடி பேசத் தொடங் கினான். இருவரும் கப்பலேறி வேறு நகரத்திற்குச் சென்று தொழில் செய்யலாம் என்று அவன் ஆலோசனை கூறினான். 'நம் இருவர் தொழில்களும் எங்கும் செல்லக்கூடியவை, எல் லோருக்கும் தேவையானவை. இங்கே வறுமையில் உழல்வதை விட, நாம் வெளி நாடு செல்லுவதே எல்லா வகையிலும் நன்மை யாகும்!' என்று அவன் சொன்னான்.



மருத்துவனும் அவன் சொல்லில் உண்மையிருந்ததை உணர்ந்துகொண்டான். இருவரும் விரைவிலே கிளம்புவதற்கு ஏற்பாடு செய்யவேண்டுமென்று தீர்மானித்தனர். அப்பொழுது அபு கிர் கூறியதாவது: 'நண்பா, நாம் இருவரும் சகோதரர்களாகிவிட்டோம். நமக்குள்எவ்விதவேற்றுமையும்கிடையாது. இது முதல் நாம் ஓர் உடன்பாடு செய்துகொள்வோம். நம்மில் எவன் ஒருவனுக்குவேலை கிடைத்தாலும், அவன்வேலை கிடைக்காத மற்றவனுக்கு உணவளித்து வர வேண்டும்; இருவர் செலவும் போக மிஞ்சியதை ஒரு பெட்டியிலே போட்டுப் பொதுவில் சேமித்து வைத்திருப்போம். அலெக்சாந்திரியாவுக்குத் திரும்பி வந்த பிறகு, அந்தச் சேமிப்பை ஆளுக்குப் பாதியாகப் பிரித்து எடுத்துக்கொள்வோம்!' 'அவ்வாறே செய்வோம்!' என்று அபு ஸிர் சம்மதித்தான். இருவரும் இந்த உடன்பாட்டை உறுதி செய்துகொள்வதற்காகத் திருக்குர் ஆன் வேதத்திலுள்ள முதலாவது சூறாவை ஓதினார்கள். அபு ஸிர் தன் கடையைப் பூட்டி, திறவுகோலைக் கடையின் சொந்தக்காரரிடம் ஒப்படைத்தான். இருவரும் தங்களுக்கு வேண்டிய சாமான்களை மூட்டைகளாகக் கட்டிக்கொண்டு, மறுநாளே ஒரு கப்பலில் ஏறி வெளிநாட்டிற்குப் பிரயாணமானார்கள்.

2. கடல் யாத்திரை

கப்பலில் நூற்றிருபது பிரயாணிகள் இருந்தனர். ஆயினும், சவரத்தொழிலாளி ஒருவன்கூட அதிலில்லை. எனவே அபு ஸிர் தன் நண்பனிடம் பேசும் பொழுது, 'இங்கே மருத்துவ குலத்தைச் சேர்ந்தவன் என்னைத் தவிர வேறு எவனுமில்லை. ஆகையால், நான் என் கத்திப் பெட்டியை எடுத்துக்கொண்டு பிரயாணிகளிடையே போனால், எவராவது சிலர் சவரம் செய்யச் சொல்லுவர். காசோ, ரொட்டியோ, குடிதண்ணீரோ கிடைத்தால் அதை வைத்துக்கொண்டு நாம் காலம் தள்ளலாம். நாம் பல நாட்கள் பிரயாணம் செய்ய வேண்டியிருக்கும். ஆதலால், நாள்தோறும் நாம் ஏதாவது சம்பாதித்தால்தான், நம் உண்வுக்கு ஏற்பாடு செய்துகொள்ள முடியும்!' என்று சொன்னான். சாயக்காரன், 'சரி, அப்படியே செய்!' என்று சொல்லிவிட்டு, தலையைக் கீழே சாய்த்துக்கொண்டு உறங்கத் தொடங்கினான்.

அபு ஸிர் தன் கத்திகளையும் கிண்ணியையும் எடுத்துக் கொண்டு பிரயாணிகளிடையே சென்றான். அவன் தோளில் கந்தலான ஒரு துண்டும் இருந்தது. பிரயாணிகளில் ஒருவன் அவனைக் கண்டதும், அவனை அழைத்துத் தனக்குச் சவரம் செய்யும்படி வேண்டிக்கொண்டான். மருத்துவனும் அவ்வாறே செய்துவிட்டுக் கிளம்பும் பொழுதும், பிரயாணி அவனுக்கு அரை திர்ஹம்* அளித்தான். அவன், 'காசுக்குப் பதிலாகக் கொஞ்சம் ரொட்டி கிடைத்தால் நலம். என்னுடன் ஒரு நண்பனும் வந்திருக்கிறான். எங்களிடம் போதிய உணவுப் பண்டங்கள் இல்லை!' என்று சொன்னான். பிரயாணி அவனுக்கு ஒரு துண்டு ரொட்டியும், கொஞ்சம் பாலாடையும், குடிதண்ணீரும் கொடுத்தான். அவன் அவைகளைத் தன் நண்பனிடம் கொண்டுபோய்க் கொடுத்து, 'இந்தா! எழுந்திருந்து, இவைகளை உண்டு பசியாறு! கப்பலில் நல்ல தண்ணீர் கிடைப்பது அரிது. இதோ தண்ணீரும் இருக்கிறது!' என்று சொன்னான். உடனே சாயக்காரன் எழுந்திருந்து சாப்பிடத் தொடங்கினான். மருத்துவன் மறுபடி தன் பெட்டியைத் தூக்கிக்கொண்டு கப்பலின் மேல் தளத்திலுள்ளவர்களைப் பார்க்கச் சென்றான்.

அங்கே அவன் வேறு சிலருக்கும் சவரம் செய்ததில், ரொட்டிகளும் பாலாடைகளும் கிடைத்தன. சிலர் உணவுப் பொருள்களுடன், பணமும் கொடுத்தனர். அன்று மாலைவரை அவனுக்கு வேலை சரியாயிருந்தது. மாலையில் அவனிடம் முப்பது ரொட்டித் துண்டுகளும், முப்பது வெள்ளிக் காசுகளும், கொஞ்சம் பழங்களும், வெள்ளரிக் காய்களும், பாலாடைகளும் சேர்ந்திருந்தன. அவன் எது கேட்டாலும், பிரயாணிகள் அவனுக்கு அளிக்கச் சித்தமாயிருந்தனர். மேலும், அவன் அன்றே கப்பலின் தலைவரான கப்பித்தானுக்கும்** சவரம் செய்தான். அப்பொழுது கப்பித்தான், அவன் நிலைமையை விசாரித்துத் தெரிந்துகொண்டு, 'ஒவ்வொரு நாளும் இரவில் நீர் உமது நண்பரையும் அழைத்து வந்து என்னுடன் சாப்பிட வேண்டும். எத்தனை நாட்கள் என்னுடன் நீங்கள் பிரயாணம் செய்கிறீர்

* திர்ஹம் - ஒரு தங்க நாணயம்.

** கப்பித்தான் - 'கேப்டன்' என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் உருவம்.

களோ அதுவரை சாப்பாட்டைப்பற்றி நீங்கள் கவலைப்படவே வேண்டாம் !' என்று சொன்னார்.

பின்னர், மருத்துவன் தன் இடத்திற்குத் திரும்பினான். அங்கே அப்பொழுதும் உறங்கிக்கொண்டிருந்த நண்பனை எழுப்பினான். அவன் எழுந்ததும், தனக்கு முன்னால் வைத்திருந்த ரொட்டிகளையும், காய், கனிகளையும் பார்த்து, 'இவைகளை யெல்லாம் எங்கிருந்து பெற்றாய்?' என்று கேட்டான். 'அல்லாஹ்வின் அருளிலிருந்து !' என்றான் அபு ஸிர். உடனே அபு கிர் உணவுப் பொருள்களை உண்பதற்காகப் பாய்ந்திருப்பான்; அதற்குள் அவன் நண்பன், 'இவைகளை நீ உண்ண வேண்டாம், சகோதர ! இவற்றை அப்படியே வைத்திருந்தால், மற்றொரு சமயத்திற்கு உதவும். இப்பொழுது இரவுச் சாப்பாட்டிற்காக இந்தக் கப்பலின் கப்பித்தான் நம் இருவரையும் அழைத்திருக்கிறார். நாம் அவருடன் போய் உணவருந்துவோம். இனிமேலும் தினந்தோறும் நமக்கு இராச் சாப்பாடு அவருடன்தான் !' என்று சொன்னான். ஆனால் அபு கிர், கப்பல் யாத்திரையால் தனக்குத் தலைக் கிறுகிறுப்பு ஏற்பட்டிருப்பதாயும், தான் அங்கே இருந்தவைகளையே உண்பதாயும் சொன்னான். அபு ஸிர், ' சரி, சாப்பிடு!' என்று சொன்னான்.

அபு கிர் உணவுப்பொருள்களின் மீது ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்தான். ரொட்டிகளை அவன் கடித்துத் தின்றதும், தண்ணீரை 'மடக்கு, மடக்கு' என்று குடித்ததும் எல்லாம் விலங்குகள் பசியோடு உண்பனபோலவே இருந்தன. காய்ந்த மாடு கம்புக் கொல்லையில் விழுந்து உழக்குவது போல அவன் காட்சியளித்தான். யானை கவளங்களை விழுங்குவது போல் அவன் ரொட்டிகளையும் கனிகளையும் விழுங்கினான். அவனுடைய இரண்டு கைகளும் வாயும் இடைவிடாமல் வேலை செய்துகொண்டிருந்தன. அபு ஸிர் அந்தக் காட்சியைப் பார்த்துக் கொண்டே எதிரில் அமர்ந்திருந்தான். அந்த நேரத்தில் ஒரு மாலுமி அங்கே வந்து, 'கப்பித்தான் சாப்பாட்டிற்காக உங்களை அழைக்கிறார். உங்கள் நண்பரையும் கூட்டிவரச் சொன்னார் !' என்றான்.

அப்பொழுதும் அபு ஸிர் தன் நண்பனை அழைத்தான். ஆனால் அவன், 'என்னால் நடக்க முடியாது!' என்று சொல்லிவிட்டான்.

ஆகவே, அபு ஸிர் மட்டும் தனியாகச் சென்றான். அவன் கப்பித்தான் அறையில் நுழையும்பொழுது, அவருடன் பல மாலுமிகளும் அமர்ந்திருந்தனர்; மேசைகளின்மீது தட்டுகளில் பல வகையான உணவுப் பண்டங்கள் வைக்கப்பெற்றிருந்தன. அவனைக் கண்டதும், கப்பித்தான் அவனை வரவேற்று, 'உமது நண்பர் எங்கே?' என்று விசாரித்தார். மருத்துவன் தன் நண்பனுக்குத் தலைக் கிறுகிறுப்பு ஏற்பட்டிருப்பதாயும், அவனால் நடக்க முடியவில்லை என்றும் தெரிவித்தான். 'சில நாட்களுக்குக் கப்பல் நோய் அப்படித்தான் இருக்கும்; பிறகு சரியாகப் போய்விடும்! அவருக்கு வேண்டிய உணவை நீர் முதலில் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு வாரும். அதுவரை நாங்கள் உமக்காக காத்திருக்கிறோம்!' என்று சொல்லி, ஒரு

பெரிய பாத்திரத்தில் உணவுத்தட்டுகளை எடுத்து வைக்க ஏற்பாடு செய்தார். அபு ஸிர் அந்தப் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு போய்ச் சாயக்காரனிடம் வைத்தான். அந்தப் பாத்திரத்தில் பத்துப் பேர்கள் உண்ணக்கூடிய அளவு ரொட்டிகளும், சோறும், கறிகளும் இருந்தன. அப்பொழுதும் சாயக்காரன் முன்னால் வந்திருந்த ரொட்டிகளைப் பற்களால் அரைத்து உள்ளே தள்ளிக்கொண்டுதான் இருந்தான். அவனைப் பார்த்து அபு ஸிர், 'இவைகளை உண்ண வேண்டாமென்று நான் அப்பொழுதே சொல்லவில்லையா ? கப்பித்தான் மிகவும் நல்ல மனிதர். உனக்கு உடம்பு சரியாயில்லை என்று நான் அவரிடம் சொன்னேன். உடனே அவர் உனக்கும் உணவு எடுத்துவைக்க உத்தரவிட்டார் !' என்று சொன்னான்.

'அந்தப் பாத்திரத்தை இப்படி நகர்த்து!' என்றான் அபு கிர். மருத்துவன் அதை அவன் அண்டையில் தூக்கி வைத்தான். உடனேயே அபு கிர் அதிலிருந்த தட்டுகளை வெளியே எடுத்து, நாய்கள் உறுமிக்கொண்டே சோற்றைக் கௌவுவதுபோல், சோற்றையும் கறிகளையும் அள்ளி அள்ளி விழுங்கத் தொடங்கினான். அந்நிலையில் அபு ஸிர் அங்கிருந்து கப்பித்தான் அறையை நோக்கிப் புறப்பட்டான்.

கப்பித்தானுடைய விருந்தில் எல்லாப் பண்டங்களும் சுவையாக இருந்தன. உணவுக்குப் பின்னால் எல்லோரும் காப்பியும் பருகினர். விருந்து முடிந்தபின், அபு ஸிர் தன் இடத்திற்குத் திரும்பினான். அங்கே அவன் கொண்டுபோய் வைத்திருந்த பாத்திரத்தில் வெறும் தட்டுகளே இருந்தன ; உணவு முழுவதையும் அபு கிர் காலி செய்திருந்தான். காலிப் பாத்திரத்தை அவன் கப்பித்தானுடைய வேலை ஆட்களிடம் கொடுத்துவிட்டு வந்து, இரவில் நன்றாக உறங்கினான்.

மறுநாளும் அபு ஸிர் பலருக்கு முடி வெட்டியும், சவரம் செய்தும், ஏராளமான ரொட்டிகள், இறைச்சி முதலியவைகளைப் பெற்றான். அவைகளையெல்லாம் முன்போல் அவன் தோழனிடம் கொண்டுபோய்ச் சேர்த்தான். அத்தோழனோ, வந்தவைகளையெல்லாம் வயிற்றிலே அடக்கம் செய்து வந்தான். அவன் இருந்த இடத்தை விட்டு எழுவதேயில்லை.

ஆனால், தனக்காகப் பிறரால் செய்யமுடியாத காரியங்களுக்காக மட்டும் அவன் இரண்டொரு முறை எழுந்து செல்வான். மறுபடியும் படுக்கைதான், உறக்கம்தான்! ஒவ்வொரு நாள் இரவிலும், மருத்துவன் கப்பித்தான் அறையிலிருந்து அவனுக்குச் சாப்பாடும் கொண்டுவந்து கொடுத்துக்கொண்டிருந்தான். இவ்வாறு இருபது நாட்கள் கழிந்தன.

கப்பல் ஒரு பெரிய நகரின் துறைமுகத்தில் நங்கூரம் பாய்ச்சி நின்றது. அபு ஸிர்ரும், தோழனும் கப்பலின் தலைவருக்கும், மற்ற நண்பர்களுக்கும் நன்றி சொல்லி விடைபெற்றுக்கொண்டு, கப்பலை விட்டுக் கீழே இறங்கினர்.

3. நன்றி மறந்த சாயக்காரன்

நகரிலே யாத்திரிகர்கள் தங்கும் விடுதி ஒன்றில் சாயக்காரனும் மருத்துவனும் ஓர் அறையை வாடகைக்கு எடுத்துக்கொண்டு, அதிலே தங்கியிருந்தனர். அபு ஸிர் வெளியே சென்று சமையலுக்கு வேண்டிய ஒரு பானையையும், சிறு சட்டிகளையும், உணவுக்கு வேண்டிய பொருள்களையும் வாங்கி வந்து, விரைவிலே சமையல் செய்து முடித்தான். அறையில் நுழைந்தது முதலே உறக்கத்தில் ஆழ்ந்திருந்த சாயக்காரன் தட்டில் சோறு படைத்த பிறகே எழுந்திருந்தான். எழுந்ததும், சாப்பிடத் தொடங்கினான். சாப்பாடு முடிந்ததும், அவன், 'என்னைக் குறை சொல்லாதே! எனக்குக் கிறுகிறுப்பாயிருக்கிறது!' என்று சொல்லிவிட்டு, மீண்டும் பள்ளிகொண்டுவிட்டான்.

இவ்வாறு அவன் நாற்பது நாட்களாக, எழுந்து நடமாடாமலும், ஒரு வேலையும் செய்யாமலும், காலம் கழித்து வந்தான். ஆனால், அபு ஸிர் ஒவ்வொரு நாளும் கத்திப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு, நகரத்தின் பல பகுதிகளுக்குச் சென்று, தன் தொழிலைச் செய்து வந்தான். ஒவ்வொரு நாளும் திரும்பி வந்துதான் சாயக்காரனை எழுப்ப வேண்டும். எழுந்ததும், அவனுக்கு உணவு தயாராயிருக்க வேண்டும். உண்டு முடிந்ததும், அவன் மீண்டும் உறங்கத் தொடங்கிவிடுவான்.

சில சமயங்களில் மருத்துவன், 'எழுந்து உட்காரு! வெளியே சிறிது நடந்து சென்று, காற்று வாங்கிக்கொண்டு, நகரை ஒரு முறை சுற்றிப் பார்! இந்நகரில் பார்க்க வேண்டிய இடங்கள் பல இருக்கின்றன. மக்கள் உற்சாகமாயிருக்கின்றனர். காலாற நடந்தால், நோய் தானாகவே போய்விடும்!' என்று அவனிடம் சொல்லுவான். அவன், 'என்னைக் குறை சொல்லாதே, எனக்குக் கிறுகிறுப்பாயிருக்கிறது!' என்றே பதில் சொல்லிவிடுவான். அவன் மனம் வருந்தும்படி கடிந்து பேசவோ, அவனுடைய உணர்ச்சிகளைப் புண்படுத்தவோ அபு

ஸிர் விரும்பமாட்டான். அம்மட்டோடு அவனை விட்டு விடுவான்.

ஆனால், இவ்வாறு சில வாரங்கள் கழிந்த பின்பு, நாற்பத் தோராவது நாளில், மருத்துவனுக்கே நோய் வந்துவிட்டது. அவனும் படுத்துவிட்டான். அவனால் எழுந்து வெளியே சென்று வர இயலவில்லை. அப்பொழுது விடுதியிலிருந்த ஒரு காவற்காரன் அவர்களுக்கு உதவி செய்து வந்தான். நான்கு நாட்கள் அவனே வெளியே சென்று, அவர்களுக்கு வேண்டிய உணவு முதலியவற்றை வாங்கிக் கொடுத்துவந்தான். அபு கிர் அப்பொழுதும் படுத்துக் கிடந்தான்; உணவு வந்தவுடன் உண்டு விட்டு, அவன் மீண்டும் பாய்மேல் படுத்துவிடுவான். பக்கத்திலே நண்பன் நோயுற்றுக் கிடக்கும் பொழுது, அவனுக்கு எவ்வித உதவியும் செய்வதில்லை. ஐந்தாவது நாளில் அபு ஸிர்ரின் நோய் அதிகமாகிவிட்டது. அவன் தன்னினைவு இழந்து, பேச்சில்லாமல், மூடிய கண்களைத் திறவாமல் படுத்திருந்தான்.

அபு கிர் பசி தாங்காமல் எழுந்திருந்து நண்பனுடைய தலைமாட்டில் கிடந்த துணியை உதறிப் பார்த்தான். அதில்

ஒரு பையில் ஆயிரம் வெள்ளிக் காசுகள் இருந்தன. அவன் அவைகள் அனைத்தையும் அப்படியே அள்ளி எடுத்துக் கொண்டு, யாரிடமும் எவ்விதத் தகவலும் சொல்லாமல், அறையின் கதவை மெதுவாக அடைத்துவிட்டு வெளியே சென்றான். விடுதிக்காவற்காரன் அப்போது சந்தைக்குச் சென்றிருந்ததால், அவனுக்கும் சாயக்காரன் வெளியேறியது தெரியாமற் போயிற்று.

அபு கிர் நேராகக் கடைத்தெருவுக்குச் சென்று, உயர்ந்த உடைகள் வாங்கி அணிந்துகொண்டான். அவைகளின் விலை ஐந்நூறு திர்ஹம்! பிறகு அவன் நகரைச் சுற்றிப் பார்க்கலானான். வழியில் வயிறு நிறையப் பல விதமான உணவுகளை வாங்கிப் புசித்துக்கொண்டான். மற்ற நகரங்களைப் போல இல்லாமல் அந்த நகரம் சில விதங்களில் புதுமையாயிருப்பதாக அவன் கருதினான். மக்கள் அணிந்திருந்த உடைகளையெல்லாம் அவன் கவனித்தான். அவை அனைத்தும் ஒன்று .வெண்மை நிறமாயிருந்தன. அல்லது நீல நிறமாயிருந்தன. இந்த இரண்டு நிறங்களைத் தவிர, வேறு நிறமே அவன் கண்களில் படவில்லை. அவன் ஒரு சாயக்காரன் கடைக்குள்ளே சென்று, தன்னுடைய துண்டு ஒன்றுக்குச் சாயம் பிடிக்க வேண்டுமென்று கோரினான். கடைக்காரன் அதற்கு இருபது திர்ஹம் வேண்டுமென்று கேட்டான். ‘எங்களுடைய நாட்டில் இரண்டு திர்ஹம்தான் கொடுப்பது வழக்கம் !’ என்றான் அபு கிர். கடைக்காரன், ‘அப்படியானால் அங்கேயே போய்ச் சாயம் பிடியுங்கள் !’ என்று சொன்னான். அபு கிர், ‘இருபது திர்ஹம் கொடுத்தால், நீர் என்ன சாயத்தில் முக்கிக் கொடுப்பீர் ?’ என்று கேட்டான்.

‘நீலச் சாயம்.’

‘எனக்குச் சிவப்புச் சாயம் வேண்டும் !’

‘சிவப்புச் சாயம் பிடிக்க எனக்குத் தெரியாது !’

‘அப்படியானால் பச்சைச் சாயம் போதும் !’

‘பச்சையும் பழக்கமில்லை.’

'மஞ்சள் ?'

'அதுவும் தெரியாது.'

அபு கிர் தனக்குத் தெரிந்த சாயங்களின் நிறங்களை யெல்லாம் கூறிப் பார்த்தான். அப்பொழுது கடைக்காரன் பின் கண்டவாறு தெரிவித்தான் : "இந்த நகரிலே நாங்கள் நாற்பது பேர்கள் சாயக்காரர்கள் இருக்கிறோம். எங்களில் ஒருவர் இறந்தால், இறந்தவர் மகனுக்கு நாங்கள் சாயம் காய்ச்சக் கற்றுக் கொடுக்கிறோம். இறந்தவருக்கு மகனே இல்லையென்றால் எங்களில் ஒருவர் குறைவு என்று வைத்துக் கொள்வோமே தவிர, வெளியிலே மற்றொருவருக்குச் சொல்லிக் கொடுப்பது கிடையாது. ஒருவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தால், ஒரு பிள்ளைக்குத்தான் சாயத் தொழிலைக் கற்பிப்போம். அவன் இறந்து போனால்தான், அடுத்த பிள்ளைக்குக் கற்பிப்போம். இவ்வாறு எங்களுடைய தொழில் கண்டிப்பான கட்டுத்திட்டங்களுக்கு உட்பட்டது. நாங்கள் அனைவரும் நீல நிறத்தைத் தவிர, வேறு எந்தச் சாயமும் காய்ச்சுவதில்லை ; எங்களுக்குத் தெரிந்த வர்ணம் அது ஒன்றுதான் !"

அதைக் கேட்ட அபு கிர், "நானும் ஒரு சாயக்காரன் தான். எல்லா வர்ணங்களிலும் எனக்குச் சாயம் காய்ச்சத் தெரியும். என்னை நீர் உம்மிடம் வேலைக்கு வைத்துக் கொண்டால், எனக்குத் தெரிந்த தொழில் நுட்பங்களை யெல்லாம் உமக்குச் சொல்லித் தருகிறேன். அதனால் நீர் மற்ற சாயக்காரர்களைவிட மேலான நிலையை அடையலாம்!" என்று சொன்னான்.

"வெளியார்களை நாங்கள் எங்கள் தொழிலில் வைத்துக் கொள்வதில்லை !"

"நானாகச் சொந்தத்தில் ஒரு சாயப் பட்டறை வைத்துக் கொள்ளலாமா ?"

"அதற்கும் நாங்கள் சம்மதிக்க மாட்டோம் !"

அதற்கு மேல் அபு கிர் அங்கே நிற்கவில்லை. அவன் வெளியே சென்று, மற்றொரு சாயக்காரனைக் கண்டு

பேசினான். அவனும் முதலாவது கடைக்காரன் சொன்னவைகளையே திரும்பச் சொன்னான். அபு கிர் மேலும் பலரை விசாரித்ததில், அவர்களும் அவ்வண்ணமே சொன்னார்கள். எவரும் அவனை வேலைக்கு வைத்துக்கொள்ள இசையவில்லை; பயிற்சிக்குக்கூடச் சேர்த்துக்கொள்ள விரும்பவில்லை. பிறகு, அவன் சாயக்காரர்களின் தலைவனான ஷேக்கிடம் சென்று விசாரித்தான். அவனும் அந்நியருக்குத் தங்கள் தொழிலில் இடமில்லை என்று கூறிவிட்டான். அதற்குப் பின் அபு கிர் மிகவும் வருத்தமும் கோபமும் அடைந்து, நேரே நகரின் மன்னருடைய அரண்மனையை நோக்கிச் சென்றான்.

அங்கே அவன் அரசரைப் பேட்டி கண்டு பேசினான்: 'அரசே! நான் வெளி நாட்டவன். என் தொழில் சாயம் காய்ச்சுதல். இந்த நகரத்திலே உள்ள சாயக்காரர்களை நான் கண்டு பேசினேன். அவர்களுக்கு நீல நிறத்தைத் தவிர, வேறு சாயமே தெரியாது. அவர்கள் அனைவரும் என்னை வேலைக்கு வைத்துக்கொள்ள மறுத்துவிட்டனர். அவர்களுடைய தலைவரான ஷேக்கையும் நான் கண்டு பேசிப் பார்த்தேன். ஒன்றும் பயனில்லை. அவர்களில் எவரும் புதிதாக எதையும் கற்றுக்கொள்ளவும் விரும்பவில்லை. நான் பல வர்ணங்களில் சாயம் காய்ச்சுவேன். வானவில்லிலே காணும் நிறங்கள் அத்தனையையும் நான் துணிகளில் ஏற்றிக் காட்ட முடியும். சிவப்பு நிறம் என்றால், அதிலேயே ரோஜாப் பூவின் மெல்லிய சிவப்பிலிருந்து பவளத்தின் முற்றிய சிவப்பு வரை பல வர்ணங்கள் தயாரிக்க முடியும். பச்சையிலும் இலைப் பச்சை, புல்லின் பச்சை, கிளிப்பச்சை முதலிய வகைகள் உண்டு. கறுப்பு நிறத்தில் மை போன்ற கறுப்பு, காக்கைக் கறுப்பு, நிலக்கரிக் கறுப்பு முதலிய வண்ணங்களைக் காட்டலாம். மஞ்சளை எடுத்துக்கொண்டால், எலுமிச்சம்பழம் போன்ற மஞ்சள், தங்கம் போன்ற மஞ்சள், ஆரஞ்சு முதலிய பல வகை உண்டு. இவைகளைப் போலவே இன்னும் பல வண்ணங்களில் நான் துணிகளைத் தயாரிக்க முடியும். வண்ணங்களில் ஒன்றோடு ஒன்றைக் கலந்து நூற்றுக்கணக்

கான சாயங்களை உண்டாக்கலாம். என்னிடம் திறமை இருக்கிறது: ஆனால், அதை உங்களுடைய நகரில் பயன்படுத்த வழியில்லையே!

அதைக் கேட்ட அரசர், "நீ சொல்லுவது உண்மைதான். உனக்காக நான் ஒரு புதிய சாயப்பட்டறை திறக்கத் தயாராய் இருக்கிறேன். அதற்கு வேண்டிய மூலதனமும் தருகிறேன். உனக்கு இனிமேல் கவலையே வேண்டியதில்லை. உனக்கு எவர்களாவது இனி இடையூறு செய்தாலும், தடை உண்டாக்கினாலும், அவர்களைத் தூக்கிலே தொங்கவிட்டுவிடுவேன்!" என்று மகிழ்ச்சியோடு தெரிவித்தார். உடனேயே அவர், கைதேர்ந்த கொற்றர்களை வரவழைத்து, "நீங்கள் இந்தச் சாய நிபுணருடன் சென்று, நகரைச் சுற்றிப் பார்த்து, புதிய சாயப் பட்டறை அமைக்க இவர் தேர்ந்தெடுத்துக் காட்டும் இடத்தைக் கவனியுங்கள்! அங்கே எவருடைய கட்டடம் இருந்தாலும், அதில் இருப்பவர்களை உடனே காலி செய்யச் சொல்லி, அதை இடித்துவிட்டு, இவர் சொல்லுகிற முறையில் புதிய கட்டடத்தைக் கட்டி முடியுங்கள்! இவர் சொல்லுவதுதான் உங்களுக்குச் சட்டம்: அதை நீங்கள் மாற்றவோ, எதிர்க்கவோ கூடாது: எச்சரிக்கை!" என்று சொன்னார். மேலும், அவர் சாயக்காரனான அபிகிர்ருக்கு மதிப்புயர்ந்த புதிய உடைகள் அளித்து, அவனுக்கு ஏவல் புரிய இரு வெள்ளை அடிமைகளையும், அவன் ஏறிச் செல்வதற்கு உயர்ந்த குதிரை ஒன்றையும் அவனிடம் ஒப்படைத்தார். ஆயிரம் தினார்* நாணயங்களை அவன் கையிலே கொடுத்து, மன்னர், "கட்டடம் கட்டும்வரை இதை உன் விருப்பம்போல் செலவு செய்ய வைத்துக்கொள்ளவும்!" என்று கூறினார். அவன் வசிப்பதற்காக ஒரு வீடும் ஒதுக்கப்பெற்றது. அவ்வீட்டுக்குத் தேவையான நாற்காலிகள், கட்டில் முதலியவைகளையும் உடனே வாங்கி வைப்பதற்கும் மன்னர் உத்தரவிட்டார்.

---

* தங்க நாணயம்

4. அபு கிர்ரின் அதிருஷ்டம்

புத்தம் புதிய உடைகள் அணிந்து, அபு கிர் குதிரைமீது சவாரி செய்துகொண்டு நகருக்குள்ளே செல்லும் பொழுது, பெரிய அமீரைப் போல விளங்கினான். கொற்றர்களும் சிற்பிகளும் அவனைத் தொடர்ந்து சென்றனர். நகரின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்து, அவன் முடிவாக ஓரிடத்தைத் தேர்ந்தெடுத்தான். அங்கேயிருந்த வீட்டில் குடியிருந்தவருக்கு அரசர் ஏராளமான நிதி அளித்து, அதை விலைக்கு வாங்கினார். பின்னர் கொற்றர்கள் வேலை செய்யத் தொடங்கினர். சாயக்காரன் அருகில் இருந்துகொண்டு, 'இப்படிக் கட்டுங்கள், அப்படிக் கட்டுங்கள்!' என்று ஆலோசனை சொல்லிக்கொண்டிருந்தான். வேலை மும்முரமாக, நடந்ததால் புதிய கட்டடம் மேலெழுந்துவிட்டது. பற்பல கொற்றர்கள் கூடி அதை விரைவிலேயே கட்டி முடித்தார்கள்.

கட்டடம் கட்டி முடிந்த செய்தியை அபு கிர் அரசரிடம் போய்த் தெரிவித்து, மேற்கொண்டு சாயப் பொருள்கள்,

கருவிகள், தளவாடங்கள் முதலியவை வாங்க வேண்டிய விவரத்தையும் கூறினான். உடனே மன்னர் நாலாயிரம் பொற்காசுகளை அள்ளிக்கொடுத்து, 'இவற்றை மூலதனமாக வைத்துக்கொண்டு தொழிலைத் தொடங்கு! சாயத் தொழிற் சாலை எப்படி வேலை செய்கிறது என்பதைச் சீக்கிரத்திலே பார்ப்போம்!" என்று கூறினார்.

அபு கிர் பணத்தைப் பெற்றுக்கொண்டு, சந்தைக்குச் சென்று தேவையான பொருள்களையெல்லாம் வாங்கினான். பல வண்ணங்களில் சாயமேற்றுவதற்காக அரசர் ஐந்நூறு 'பீசுகள்' துணி அனுப்பியிருந்தார். அவன் அவைகளை வித விதமான வண்ணங்களில் சாயமேற்றித் தன் தொழிற்சாலையின் முன் பக்கத்திலும் மாடத்திலும் கொடிகளில் தொங்கவிட்டான். அந்த வழியாகச் சென்ற மக்கள், தாங்கள் அம்மாதிரியான அற்புதத்தைக் கண்டதில்லை ஆதலால், அங்கே சிறிது நேரம் நின்று, கண்ணைப் பறிக்கும் வண்ணங்களைக் கண்டு மகிழ்ந்தனர். பலர் தொழிற்சாலை வாயிலில் கூட்டமாகக்கூடி,



"ஐயா, இந்த வண்ணங்களின் பெயர்கள் என்ன?" என்று வினவினார்கள். அபு கிர், சலிப்பில்லாமல் அவர்களுக்கு வேண்டிய மறுமொழிகளைச் சொல்லிக்கொண்டிருந்தான். அதிலிருந்து ஜனங்களும் ஏராளமான துணிகளைக் கொணர்ந்து சாயம் பிடிப்பதற்காக அவனிடம் கொடுத்து வந்தார்கள். "கூலி எவ்வளவானாலும் தருகிறோம். சாயம் நல்லதாயிருக்க வேண்டும்!" என்று அவர்கள் கூறினார்கள்.

அரசர் அனுப்பிய துணிகளையெல்லாம் சாயமேற்றி முடிந்ததும், அபு கிர் அவைகளை எடுத்துக்கொண்டு, அவருடைய கொலு மண்டபமாகிய திவானில் கொண்டுபோய்க் காட்டினான். அரசர் அவைகளைப் பார்த்ததும் உள்ளம் பூரித்து, அவனுக்குப் பல பரிசுகளை அளித்துப் பாராட்டினார். அதிலிருந்து அரசருடைய படை வீரர்கள் அனைவரும், தங்கள் துணிகளையெல்லாம் அவனுக்கு அனுப்பி, குறித்த சாயங்களேற்றித் தரும்படி கேட்டுக்கொண்டார்கள். அவர்களிடமிருந்து அவனுக்கு வெள்ளியும் பொன்னுமாக வந்து குவிந்து கொண்டிருந்தன. அவனுடைய புகழ் எங்கும் பரவலாயிற்று. அவனுடைய தொழிற்சாலையை மக்கள் 'சுல்தானின் தொழிற்சாலை' என்றே கூறி வந்தனர். நாளுக்குநாள் அவனுடைய தொழில் பெருகி வந்தது. நகரிலிருந்த மற்றைச் சாயக்காரர்களும் அவனிடம் வந்து மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, தங்களுக்கும் தொழிலைக் கற்பிக்கும்படி வேண்டிக்கொண்டார்கள். ஆனால், அவன் யாரையும் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டான். அவனிடம் செல்வம் குவிந்துவிட்டது. ஏராளமான கறுப்பு அடிமைகளும், பணிப்பெண்களும் சேர்ந்துவிட்டனர். எப்பொழுதும் அவனுக்கு அரசருடைய தயவும் இருந்து வந்தது. ஆகவே, அவன் பழைய சாயக்காரர்களைச் சிறிதும் மதிக்கவில்லை.

அபு கிர்ரின் நிலைமை இவ்வாறிருக்க, இனி அவனுடைய நண்பனான அபு ஸிர்ரைப்பற்றிக் கவனிப்போம். அவன் சேர்த்து வைத்திருந்த பணமும் போய், அவனும் அறைக்குள்ளே நினைவற்றுக் கிடந்தான். அறையின் கதவும் அடைத்தே இருந்தது. விடுதியின் வேலையாள், அந்த

அறையிலிருந்த இருவரையும் காணாமல், மூன்று நாட்களாகப் பேசாமலிருந்தான். மூன்றாவது நாள் மாலை வரை அவன் அறையில் ஆளேயில்லை என்று எண்ணியிருந்தான். அறைக்கு வர வேண்டிய வாடகையும் வரவில்லை. எனவே, அவன் அன்று இருட்டியவுடன், என்ன செய்வதென்று யோசித்துக்கொண்டே, அந்த அறைப்பக்கம் சென்றான். உள்ளே மருத்துவன் முனகிக்கொண்டிருப்பது அவன் செவியிலே பட்டது. திறவுகோலும் பூட்டும் வாயிலிலேயே இருந்ததை அவன் கண்டான். உடனே கதவைத் திறந்து, அவன் உள்ளே சென்று பார்த்தான். அபு ஸிர் படுத்தவண்ணம் முனகிக்கொண்டிருந்தான். வேலையாள் அவனை நோக்கி, "ஒன்றும் பயப்பட வேண்டாம்! உமது நண்பர் எங்கே?" என்று கேட்டான். அபு ஸிர், "ஆண்டவன் அறியச் சொல்லுகிறேன், இன்றுதான் எனக்குச் சுயநினைவு வந்தது; மெல்லக் கூவிப் பார்த்தேன் ; பதில் பேச இங்கே யாருமில்லை!" என்றான். அவன் மேலும் கூறியதாவது: "ஆண்டவன்தான் உனக்கு அருள் புரிய வேண்டும்! என் தலையணை அடியில் என் பணப்பை இருக்கிறது. அதிலிருந்து இரண்டரை திர்ஹாம் எடுத்து, நல்ல உணவு ஏதாவது வாங்கிவர ஏற்பாடு செய்" என்றும் வேண்டினான்.

வேலையாள் பையை எடுத்துப் பார்த்தான்: அது காலியாய் இருந்தது. அதை அவன் அபு ஸிர்ரிடம் சொன்னான். உடனே அபு ஸிர், தன் நண்பன் அபு கிர்ரே பணத்தை அடித்துக்கொண்டு போய்விட்டான் என்பதை உணர்ந்து, "என் நண்பரை நீ பார்த்தாயா?" என்று கேட்டான். "மூன்று நாட்களாக நான் அவரைப் பார்க்கவேயில்லை. நீங்கள் இருவருமே வெளியேறிப் போய்விட்டீர்களோ என்று நான் இது வரை எண்ணியிருந்தேன்." "இல்லை, இல்லை! என் நண்பரே என் பணத்தின்மீது ஆசை வைத்து, நான் நோயுற்றிருப்பதைக் கண்டு, அதை எடுத்துக்கொண்டு ஓடிவிட்டார்!" என்று மருத்துவன் சொன்னான். அவன், வருத்தம் தாங்காமல், அழுது அரற்றத் தொடங்கினான். அப்பொழுது வேலையாள், "உமக்கு ஒரு கேடும் வராது: அவருடைய செயலுக்கு

அல்லாஹ் அவருக்குப் பாடம் கற்பித்துவிடுவான்!" என்று சொல்லி, அவனைச் சமாதானப்படுத்தினான். பிறகு, அவன் அங்கிருந்து எழுந்து சென்று, கொஞ்சம் சூப்புத் தயாரித்துக் கொண்டு வந்து, அபு ஸிர் அதைக் குடிக்கும்படி செய்தான்.

இரண்டு மாத காலம், அவன் தன் சொந்தப் பணத்தைச் செலவழித்து, அபு ஸிர்ருக்கு வேண்டிய உதவிகளையெல்லாம் செய்து வந்தான். அதன் பின்பு, ஆண்டவன் கருணையால், அபு ஸிர் முற்றும் குணமாகி எழுந்திருந்தான். அப்பொழுது அவன் வேலையாளைப் பார்த்து, 'எல்லாம் வல்ல இறைவன் என்னை நல்ல நிலைமையில் வைத்தவுடன், நீ செய்த உதவிக்காக உனக்குக் கைம்மாறு செய்யத் தவற மாட்டேன்! ஆனால், எல்லாவற்றிற்கும் மேலே அருள் பொழிபவன் ஆண்டவன் ஒருவனே! ஆண்டவன் உனக்கு எல்லா நன்மைகளையும் அளிப்பானாக!' என்று கூறினான். அதைக் கேட்ட வேலையாள், 'நீர் குணமடைந்ததற்காக நான் ஆண்டவனுக்கு நன்றி செலுத்துகிறேன்! நான் உமக்காக எதுவும் செய்யவில்லை; அருளாளனான அல்லாஹ்வுக்காகவே என் கடமையைச் செய்தேன்!"

என்றான். அபு ஸிர் அவனிடம் அரிதில் விடை பெற்றுக் கொண்டு, வெளியே புறப்பட்டான்.

அவன் கடைத் தெருக்களைச் சுற்றிப் பார்த்தான். அப்பொழுது ஒரு கடைத் தெருவின் வழியாக நடந்து செல்லுகையில், ஒரு பெரிய தொழிற்சாலையின் முன்னால் பல வண்ணங்களுள்ள துணிகள் தொங்கவிடப்பெற்றிருந்ததையும், அவைகளை ஜனங்கள் கூட்டமாக நின்று பார்த்துக்கொண்டிருந்ததையும் அவன் கண்டான். அங்கே நின்ற ஒருவரிடம், 'ஐயா, இது என்ன கடை? இங்கே கூட்டம் நிற்பதன் காரணம் என்ன?" என்று விசாரித்தான். அவர், "இதுதான் சுல்தானின் சாயத் தொழிற்சாலை; இதை அவர் அபு கிர் என்ற வெளிநாட்டார் ஒருவருக்காக அமைத்துக் கொடுத்திருக்கிறார். இங்கே புது நிறங்களில் துணிகளைச் சாயமேற்றி உலர்த்தும் பொழுதெல்லாம், நாங்கள் கூட்டமாக வந்து, அவைகளைப் பார்ப்பது வழக்கம். எங்கள் நகரில் இப்படிப் பல வண்ணங்களில் சாயம் காய்ச்சுவோர் இல்லை; அதனால் இவைகள் எல்லாம் எங்களுக்கு வியப்பாகவே இருக்கின்றன." என்று சொன்னார். மேலும் அவர், அபு கிர் முதலில் நகரின் சாயக்காரர்களைச் சந்தித்ததிலிருந்து, அரசர் புதுக்கட்டடம் கட்டி, தொழிற்சாலை அமைத்து, மூலதனம் கொடுத்ததுவரை விவரமாக அவனுக்கு எடுத்துச் சொன்னார்.

அந்தச் செய்தியைக்கேட்டதில் அபு ஸிர் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தான். அப்பொழுது அவன் பின் கண்டவாறு எண்ணமிட்டான்: "நம் நண்பனாவது நல்ல நிலையில் இருக்கிறானே! சாயத் தொழிலில் அவன் வல்லவன். ஆண்டவன் அருளால் அவன் தொழிலிலே மேலான நிலைக்கு வந்தது நல்லதுதான். முன் அவன் பணத்தைக் கையாடிய குற்றத்தைக் கூட மன்னித்துவிடலாம்; எப்படியாவது தூக்கத்தை விட்டு, என்னை விட்டுப் பிரிந்து, தொழிலில் இறங்கினானே, அது போதும்! அவன் இதுவரை என்னை வந்து பார்க்கவில்லை. இவ்வளவு பெரிய வேலையை மேற்கொண்டிருக்கையில், அவனுக்கு வெளியே வர நேரம் ஏது? அவன் வேலை இல்லாமல் என்னுடன் இருந்தவரை, நான் அவனை அன்போடு ஆதரித்து

வந்தேன். இப்போது அவன் நல்ல நிலைமையில் இருப்பதால் என்னை மிகவும் ஆதரிப்பான் என்பது நிச்சயம்!"

இவ்வாறு சிந்தனை செய்துகொண்டே, அவன் தொழிற் சாலை வாயிலை நோக்கிச் சென்று, உள்ளே எட்டிப் பார்த்தான். அங்கே அபு கிர் ஒரு கட்டிலில் விரிக்கப்பெற்றிருந்த மெத்தை யின்மீது அமர்ந்திருப்பதை அவன் கண்டான். அரசர்கள் அணியக்கூடிய மதிப்புயர்ந்த ஆடைகள் அணிந்திருந்த அபு கிர்ரின் அருகில், நான்கு கறுப்பு அடிமைகளும், நான்கு வெள்ளை ஏவலர்களும் நின்றுகொண்டிருந்தனர். உள்ளே பத்து நீகிரோ அடிமைகள் துணிகளைச் சாயத்தில் முக்கிக்கொண்டிருந்தனர். அபு கிர் தன் கைகளில் அழுக்குப் படாமல், "இதைச் செய்யுங் கள், அதைச் செய்யுங்கள் !" என்று அதிகாரம் மட்டும் செய்து கொண்டு, ஓர் அரசரைப் போல அமர்ந்திருந்தான். அந்த நிலையில், மருத்துவன் மெல்ல உள்ளே சென்று, அவனுக்கு எதிரில் சிறிது தூரத்தில் நின்றுகொண்டிருந்தான் : அவன் தன்னைக்கண்டதும் வணக்கம் கூறி வரவேற்று, பரிவும் பாசமும் கொண்டு, தன்னுடன் அளவளாவிப் பழகுவான் என்று அந்த

ஏழை மருத்துவன் மனப்பால் குடித்துக்கொண்டிருந்தான். அபு கிர்ரின் பார்வை அவன்மீது விழுந்தது.

உடனே அவன் கூப்பாடு போடத் தொடங்கினான். "அடே, போக்கிரி! தொழிற்சாலையின் வாசல் பக்கம் நிற்காதே, நிற்காதே என்று உனக்கு நான் எத்தனை தடவை சொல்லியாயிற்று? நீயோ திருடன்; இங்கே வந்து என்னை இந்த ஜனங்கள் முன்பு இழிவு செய்ய வேண்டும் என்றா விரும்புகிறாய்?" இப்படிச் சொல்லிக்கொண்டே, அவன் அடிமைகளை நோக்கி, "இவனைப் பிடியுங்கள்!" என்றான்.

கறுப்பு அடிமைகள் உடனே அவனைப் பிடித்துக்கொண்டார்கள். அபு கிர் ஆசனத்தை விட்டு எழுந்து சென்று, "அவனைக் கீழே தள்ளுங்கள்!" என்று பணித்தான். மறு கணத்தில் அபு ஸிர் தரைமீது தள்ளப்பட்டான். சாயக்காரன் ஒரு கழியை எடுத்துக்கொண்டு, அவன் முதுகில் பளீர் பளீர் என்று அடிக்கத் தொடங்கினான். அவன் கை சலிக்கும் வரை அடித்துவிட்டு, கீழே கிடந்தவனைப் புரட்டிப் போடச் சொல்லி, அவன் வயிற்றிலும் நெஞ்சிலும் மீண்டும் அடித்து நொறுக்கினான். அதற்குப் பின், அவன் தரையிலே கிடந்தவனைப் பார்த்து, "அட படுக்காளிப் பயலே! துரோகி! இனிமேல் இந்தத் தொழிற்சாலைப் பக்கம் நீ தலையைக் காட்டினால், உன்னை உடனே அரசரிடம் அனுப்பிவிடுவேன். அப்புறம் உன் கதி அதோகதிதான்! நகரக் காவலர்கள் உன் தலையை வாங்கிவிடுவார்கள்! ஓடிப்போய்விடு!" என்றும் கொக்கரித்தான்.

இவ்வாறு அபு ஸிர், மானம் அழிந்து, உடலெல்லாம் வலி தாங்காமல், அந்த இடத்தைவிட்டு வெளியேறினான். அங்கே இருந்தவர்களில் சிலர் அபு கிர்ரிடம், 'இந்த மனிதன் என்ன செய்தான்?' என்று கேட்டனர். அதற்கு அவன் கூறியதாவது: "இந்தப் பயல் ஒரு திருடன்! ஜனங்களுடைய துணிகளைத் திருடுவதே இவன் வேலை. என்னிடமிருந்து எத்தனை தடவை இவன் துணிகளைக் களவாடிச் சென்றான், தெரியுமா? அப்பொழுதெல்லாம், "இவன் ஏழை, ஆண்டவனே, இவனை மன்னித்துவிடு!" என்று நான் சொல்லுவது வழக்கம். இது

வரை மனம் இரங்கி இவனை விட்டுவிட்டேன். இவன் திருடிய துணிகளின் கிரயத்தை நான் என் கையிலிருந்து வாடிக்கைக் காரர்களுக்குக் கொடுத்துவந்தேன். இவனுக்கும் நயமாக எவ்வளவோ புத்திமதி சொன்னேன். நான் சொன்னது எதுவும் இவன் செவியில் ஏறவில்லை. இனியும் இவன் வந்தால், சுல்தானிடம் தள்ளிவிட்டுவிடுவேன். அவர் இவனுக்கு மரண தண்டனை விதிப்பார். அத்துடன் உலகில் ஓர் அயோக்கியன் குறைந்தான் என்றாகும்!' உடனே சுற்றியிருந்தவர் பலரும் மருத்துவனை வாய்க்கு வந்தபடி ஏசத் தொடங்கினர்.



5. அபு ஸிர் கட்டிய ஹம்மாம்

அபு ஸிர், தன் நண்பனிடம் பெற்ற மரியாதையை எண்ணிக்கொண்டு, துயரத்தோடு தன் விடுதிக்குத் திரும்பினான். அங்கே தன் உடலின் எரிவு தீரும்வரை உட்கார்ந்துகொண்டு, அவன் நண்பன் இழைத்த கொடுமைகளையும், கூறிய வசைகளையும் பற்றிச் சிந்தனை செய்தான். அடியினால் ஏற்பட்ட காந்தல் சற்றே குறைந்தபின், அவன் எழுந்திருந்து, சந்தைப் பக்கமாக நடந்து சென்றான். அங்கே வழியில் ஒருவனைக் கண்டு, ஹம்மாம்* எங்கே இருக்கிறது என்று விசாரித்தான். அவன் 'அது என்னது?' என்று கேட்டான். அபு ஸிர் அது குளிக்கும் அறை என்று சொன்னதன் பேரில், அவன், "இந்த நகரில் ஹம்மாம் என்பதே கிடையாது! நேரே கடலுக்குப்

---

*ஹம்மாம் - குளிக்கும் அறைகள் உள்ள இடம். அங்கே குளிர்ந்த நீரும், வெந்நீரும், தேய்த்துக் குளிப்பதற்கு வேண்டிய தைலம், சோப்பு முதலியவைகளும் இருக்கும்.

போய்க் குளியுங்கள்!" என்று சொன்னான். அவன் அரசர் கூடக் கடலிலேதான் குளிப்பதாகவும் அவன் தெரிவித்தான். அபு ஸிர் மேலும் சிலரிடம் விசாரித்த பின்னர், அரண்மனைக்குச் சென்று அரசரையே கண்டு பேசலாம் என்று எண்ணிச் சென்றான்.

அவன் மன்னர் பெருமானைத் திவானிலே தரிசித்து, தரையில் விழுந்து வணங்கி எழுந்தான். அவருக்கு ஆண்டவன் அருள் பெருக வேண்டுமென்று சொல்லிவிட்டு, அவன், "நான் ஓர் அந்நியன்: குளிக்கும் அறை அமைத்து நடத்துவது என் தொழில். இங்கே நான் குளிப்பதற்காகக் குளிப்பறையான ஹம்மாமைத் தேடிப் பல இடங்களையும் சுற்றிப் பார்த்தேன். ஆனால் ஒன்றுகூட என் கண்ணிலே படவில்லை. எழில் மிகுந்த இதைப் போன்ற ஒரு நகரில் ஹம்மாம் இல்லாதது பெருங் குறையாகும். இந்த உலகிலே ஹம்மாமில் குளிப்பதைப் போன்ற சுகம் வேறு எதிலும் கிடைக்காது!" என்று கூறினான். அரசர் ஹம்மாம் என்பது என்ன மாதிரி இருக்கும் என்று கேட்டார். மருத்துவன் அதைப்பற்றி விளக்கமாக எடுத்துச் சொன்னான். "இங்கே ஒரு பெரிய ஹம்மாம் அமைந்தால்தான் இந்தத் தலை நகரைச் சிறந்த நகர் என்று சொல்ல முடியும்!" என்றும் அவன் தெரிவித்தான். உடனே மன்னர், "உன் வரவு நல்வரவுதான்!" என்று சொல்லி, அவனுக்கு அழகான உடைகளை அளித்துக் கௌரவித்தார். அவனுக்காக ஒரு குதிரையும், வசிப்பதற்கு ஒரு வீடும், அவன் ஏவும் பணிகளைச் செய்ய இரண்டு கறுப்பு அடிமைகளும், நான்கு பணிப்பெண்களும், நான்கு வெள்ளை நிற வேலைக்காரர்களும் மன்னர் அளித்து, முன்பு அபு கிர்ருக்கு அளித்த மரியாதையைவிட மிக அதிகமான மரியாதையுடன் அவனை நடத்தத் தொடங்கினார்.

அரசர் கொற்றர்களையும், சிற்பிகளையும் வரவழைத்து, அவர்களுக்கு அபு ஸிர்ரை அறிமுகம் செய்து, அவன் குறிப்பிடுகிற இடத்தில் விரைவிலே ஓர் உயர்ந்த ஹம்மாமைக் கட்டி முடிக்க வேண்டுமென்று உத்தரவு செய்தார்.

நகரிலே நல்லதான ஓரிடத்தில் ஹம்மாமைக் கட்டவேண்டுமென்று அபு ஸிர் சுட்டிக் காட்டினான். கொற்றர்களும் சிற்பிகளும், அவனுடைய கருத்துகளை நன்றாக மனத்திலே வாங்கிக் கொண்டு, கட்டட வேலையைத் தொடங்கினார்கள். அவனும்

கூட இருந்து அவர்களுக்கு ஆலோசனை சொல்லிவந்தான். விரைவிலே கட்டடம் முடிக்கப் பெற்றது. அதில் எங்கெங்கு, என்னென்ன வர்ணங்கள் பூசவேண்டும் என்பதையும் அவனே கூறினான். அவ்விதமே வேலையாள்கள் செய்து முடித்தனர். பிறகு, அவன் அரசரைப் பேட்டி கண்டு, "எல்லா வேலைகளும் முடிந்துவிட்டன; இனி தளவாடங்களை வாங்கி ஹம்மாமை ஆரம்பிக்கலாம்!" என்று தெரிவித்தான். அரசர் பதினாயிரம் தினார்களை அவனிடம் கொடுத்தார். அந்தத் தொகையைக் கொண்டு அவன் குழாய்கள் வாங்கிப் பதித்தான். அவைகளிலே எந்த நேரமும் வெந்நீரும் தண்ணீரும் தனித்தனியாக வரு வதற்கு ஏற்பாடு செய்தான். தடாகங்களைப் போன்ற தொட்டி கள் கட்டி, அவைகளிலே நீரைத் தேக்கி, அமிழ்ந்து குளிக்கவும், நீந்தவும் வசதிகள் செய்தான். விதவிதமான நிறங்களில் துண்டுகள் வாங்கி, கொடிகள் கட்டி அவைகளைத் தொங்க விட்டான். முக்கியமான ஓரிடத்தில், பூமிக்குள்ளிருந்து தண்ணீர் பீறிட்டு மேலே வந்து வாணம் பொரிவது போல் சிதறி விழும்படி சலவைக் கற்களால் ஒரு மேடை அமைத்து, அதைச் சுற்றி வண்ண மலர்ச்செடிகள் பலவற்றை அடுக்கி வைத்தான்.

அரசரிடம் கேட்டு, அவன் திடமான உடல் படைத்த பத்து இளைஞர்களை அழைத்து வந்து, வாசனைத் திரவியங்கள், தைலம், சோப்பு முதலியவைகளைத் தேய்த்துக் குளிப்பிக்கும் முறைகளை அவர்களுக்குச் சொல்லிக் கொடுத்துப் பயிற்சி அளித்தான். கட்டடம் முழுவதும் அகில், சந்தனம் முதலிய கட்டைகளின் நறுமணப் புகை பரவியிருக்கும்படி அவன் ஏற்பாடு செய்தான். பின்னர், நகர் முழுவதும் தமுக்கடித்து விளம்பரமும் செய்யப்பெற்றது. விளம்பரக்காரன், "நகர மக்களே! புதிதாக அமைக்கப்பெற்றுள்ள சுல்தானின் ஹம்மாமில் இன்பமாகக் குளித்து, உடல் வலிகள் நீங்கி, பரிசுத்தமாகிச் சுகம் பெறுங்கள்!" என்று தெருத்தெருவாகக் கூவினான்.

ஹம்மாம் கட்டி முடிந்ததிலிருந்து, பொது மக்கள் திரள் திரளாக வந்து, அதைப் பார்த்துச்சென்றனர். அதிலுள்ள நுணுக்கங்களையெல்லாம் அபு ஸிர் அவர்களுக்கு விளக்கிச் சொன்னான். ஹம்மாமின் திறப்பு விழா சிறப்பாக நடைபெற்றது.

அதிலிருந்து மூன்று நாட்களுக்கு அங்கே வந்து குளிப்பவர்கள் யாதொரு கட்டணமும் செலுத்த வேண்டியதில்லை என்று அபு ஸிர் முன்னதாகவே தெரிவித்திருந்தான். அதனால் பெருவாரியான மக்கள் அங்கே வந்து குளித்தனர். வேலையாள்களும் அடிமைகளும் அவர்களுக்குச் செய்த உபசாரங்களைக் கண்டு, அவர்கள் ஆச்சரியமடைந்தனர். அரசர்கள், பிரபுக்களைத் தவிர வேறு எவரும் அத்தகைய ஹம்மாமில் குளிக்க இயலாது. எனவே, சாதாரண மக்கள் தங்களுக்கு அந்தப் பேறு கிடைத்ததில் பெருமகிழ்ச்சி கொண்டனர்.

நான்காவது நாளில் அபு ஸிர் மன்னரை ஹம்மாமுக்கு அழைத்து வந்தான். அவருடன் பல பிரபுக்களும், மந்திரிகளும் வந்தனர். மன்னர் உடைகளைக் களைந்ததும், அபு ஸிர் சிறு மெத்தைகள் போன்ற கையுறைகளை அணிந்துகொண்டு, அவர் உடலை மெதுவாகத் தேய்த்து, நீர் வார்த்துச் சுத்தம் செய்தான். பிறகு, பன்னீர் கலந்த தண்ணீரில் அவரை அமிழ்ந்து குளிக்கும்படி செய்தான். அதிலிருந்து அவர் வெளியே வந்ததும், என்றுமில்லாத முறையில் உடல் மென்மையாகி, தமக்குப் புதிய ஊக்கமும் உற்சாகமும் தோன்றியிருப்பதை உணர்ந்தார். அதன் பிறகு

அவரை அபு ஸிர் ஒரு மேடையிலே அமரச் செய்தான். இளைஞர்கள் அவருடைய உடலையெல்லாம் பிடித்துவிட்டு, தலையையும் வாசனைத் திரவியங்களைக் கொண்டு தேய்த்தனர். நாலு பக்கங்களிலிருந்தும் நறுமணப் புகை இன்பமளித்துப் பரவிக் கொண்டிருந்தது. மன்னர் பேரானந்தம் அடைந்தார். அவரைப் போலவே அமைச்சர்களும் பிரபுக்களும் அங்கு குளித்ததில் எல்லையற்ற மகிழ்ச்சியடைந்தனர்.

அரசர் அபு ஸிர்ரை நோக்கி, "ஹம்மாமின் அதிப ! இந்தக் குளிப்பறைகள் ஏற்படு முன்னால் என் நகரம் சிறப்பான நகரமாய் இருக்கவில்லை. இங்கே குளிப்பதற்கு ஒரு நபருக்கு எவ்வளவு கட்டணம் வசூலிக்கிறாய்!" என்று கேட்டார். "தங்கள் யோசனைப்படியே செய்யக் காத்திருக்கிறேன்!" என்றான் அவன். "ஒவ்வொருவரிடமிருந்தும் ஆயிரம் பொற்காசுகள் வசூலிப்பது

நல்லது !'' என்றார் அரசர். அபு ஸிர், "அரசர் பெரும ! எல்லா மனிதர்களும் ஒரே மாதிரியாகச் செல்வம் படைத்தவர்கள் அல்லர்; அவர்களிலே செல்வர்களும் இருக்கிறார்கள், ஏழைகளும் இருக்கிறார்கள். ஆள் ஒன்றுக்கு ஆயிரம் தினார் வீதம் நான் வாங்குவதானால். ஹம்மாம் காலியாகத்தான் இருக்கும். ஏனென்றால், ஏழைகளால் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது !'' என்று கூறினார்.

அரசர், "அப்படியானால் நீ என்ன கட்டணம் விதிக்க முடியும் !'' என்று கேட்டார். "அதை அவரவர் விருப்பத்திற்கே விட்டுவிடலாம். ஒவ்வொருவரும் தம் விருப்பப்படி இயன்றதைக் கொடுக்கட்டும். அவரவர் சக்திக்குத் தகுந்தபடி மக்கள் அளிப்பார்கள். அந்த முறையில் நமது ஹம்மாம் எப்பொழுதும் மக்களால் நிறைந்திருக்கும். தொழிலும் நன்கு நடைபெறும். ஆனால், ஆயிரம் தினார்கள் என்பது அரசர்களே அளிக்கக் கூடிய சம்மானமாகும் !''என்று அவன் பதிலளித்தான்.

மற்றைப் பிரபுக்களும் அவன் சொன்னதை ஆமோதித்தனர். "எல்லோரும் தங்களைப் போல அள்ளிக் கொடுக்க முடியுமா?'' என்றும் அவர்கள் கேட்டனர்.

மன்னர், "வெளி நாட்டிலிருந்து இங்கு வந்து, நம் நகருக்கே பெருமையை அளிக்கும் இந்த ஹம்மாமை அமைத்து நடத்துவதற்கு, நம் மக்கள் இவனுக்குத் தக்க கைம்மாறு செய்ய வேண்டாமா ? சில ஆண்டுகளுக்குப் பின் இவன் தன் சொந்த ஊருக்குத் திரும்பிச்செல்ல விரும்பினால், அப்பொழுது வெறுங் கையோடு செல்வதா ? இவற்றையெல்லாம் கருதித்தான் நான் உயர்ந்த கட்டணம் விதிப்பது நலமென்று கருதினேன். ஆனால், நீங்கள் சொல்லுவதும் பொருத்தமாய்த் தோன்றுகிறது !'' என்றார்.

அப்பொழுதுபிரபுக்கள், அபு ஸிர்ருக்கு எவ்வளவு பொருள் அளித்தாலும் தகும் என்றும், அரசர் தமது பொக்கிஷத்திலிருந்து அவனுக்குப் பெரு நிதிகள் அளித்து வர வேண்டும் என்றும், அந்த நிதிகளால் பொது மக்களே பயனடைவார்கள் என்றும் எடுத்துக் காட்டினார்கள். மேலும், "மேன்மை தங்கிய தங்கள் ஆட்சியில் பிரபுக்களாயிருக்கும் எங்களுக்குக்கூட ஒரு முறை

குளிப்பதற்கு ஆயிரம் தினார்கள் கொடுப்பதற்கு மனம் வராது; இந்த நிலையில் ஏழைகள் எப்படி அவ்வளவு தொகை கொடுக்க முடியும்?" என்றும் அவர்கள் கூறினார்கள்.

அரசர் அவர்களைப் பார்த்து, "செல்வச் சீமான்களே! இந்தத் தடவை நீங்கள் ஒவ்வொருவரும் நூறு தினார்களையும், ஒரு வெள்ளை அடிமை, ஒரு கறுப்பு அடிமை, ஓர் அடிமைப் பெண் ஆகியவர்களையும் கொடுங்கள்!" என்று சொன்னார். அவர்கள், "அவ்விதமே செய்கிறோம்; ஆனால், பின்னால் அவரவர், சக்திக்குத் தகுந்ததைக் கொடுத்து வருகிறோம்!" என்று ஒப்புக்கொண்டனர்.

மன்னருடைய கஜானாவிலிருந்து அபு ஸிர்ருக்கு ஆயிரம் பொற்காசுகளுடன் மூன்று அடிமைகளும் வந்து சேர்ந்தனர். அன்று அவருடன் வந்து ஸ்நானம் செய்ய நானூறு பிரபுக்களும், தலைக்கு நூறு தினார் வீதம் நாற்பதாயிரம் தினார்களை அவனுக்கு அனுப்பினார்கள்; அரசர் கூறியபடியே அவர்கள் அனுப்ப வேண்டிய ஆயிரத்து இருநூறு அடிமைகளும் வந்து சேர்ந்தனர். அரசர் விசேடச் சம்மானமாக அபு ஸிர்ரிடம் பதினாயிரம் தினார்களைத் தனியாக அளித்தார். மேலும், முப்பது அடிமைகளையும் அவனிடம் வேலை செய்யும்படி அனுப்பினார்.

அபு ஸிர் அங்கே வந்து நின்ற அடிமைகளை ஒரு முறை பார்த்துவிட்டு, அரசரிடம் நெருங்கி, "வேந்தர் திலகமே! தங்களை அண்டிய அடியேனுக்கு வற்றாத செல்வத்தை வழங்க வேண்டும் என்று கருதி, அள்ளி அள்ளிக் கொடுத்திருக்கிறீர்கள்! ஆனால் எண்ணில் அடங்காத அடிமைகளையும் அத்துடன் அளித்துவிட்டீர்கள்! இத்தனை பேர்களும் தங்கியிருப்பதற்குக் கூட என்னிடம் இடமில்லையே! இவர்களை நான் என்ன செய்ய? இவர்களை நானே வைத்துக்கொண்டு காப்பதானால், என் செல்வம் எல்லாம் சில நாட்களிலே கரைந்துவிடும்!" என்று விண்ணப்பித்துக்கொண்டான்.

உடனே அரசர் அடிமைகள் அனைவரையும் அனுப்பி வைக்கும்படி சொன்னார். "ஓர் அடிமைக்கு நூறு தினார் வீதம் அவர்களுக்கு உரிய விலையை உனக்கு அனுப்பச் சொல்லு

கிறேன். தவிரவும், பிரபுக்களிடமிருந்து வந்த அடிமைகளை அவர்களுக்கே நான் திரும்பக் கொடுத்துவிடுகிறேன்!'' என்று அவர் தெரிவித்தார்.

அதற்குப் பின் அரசரும் பிரபுக்களும் ஆனந்தமாகப் பேசிக்கொண்டே, அரண்மனைக்குத் திரும்பிச் சென்றனர். அன்றிரவு முழுவதும் அபு ஸிர் உறங்கவேயில்லை. அவனிடம் சேர்ந்திருந்த பொற்காசுகளை எண்ணி, பைகளில் போட்டு, முத்திரை வைக்கவே அவனுக்கு நேரம் சரியாக இருந்தது.

மறு நாள் காலை அவன் ஹம்மாமைத் திறந்தவுடன், நகரில் விளம்பரம் செய்பவனை அழைத்து, குளிப்பறைகளில் குளிக்க வருவோர் அவரவர் சக்திக்கும், தாராளச் சிந்தைக்கும் தக்கபடி, விருப்பம் போல் கட்டணம் செலுத்தலாம் என்று எங்கும் விளம்பரம் செய்யும்படி கட்டளையிட்டான். அன்று முதல் அவனிடம் இருபது வெள்ளை இளைஞர்களும், இருபது கருப்பு அடிமைகளும், நான்கு அடிமைப் பெண்களும் வேலை செய்து வந்தனர். அன்றும் பொது மக்கள் கூட்டம் கூட்டமாக வந்து குளித்துவிட்டுச் சென்றனர். மாலையில் அவனுடைய பெட்டி நிறையத் தங்க நாணயங்கள் குவிந்திருந்தன.

ஹம்மாமின் பெருமையைப்பற்றிக் கேள்விப்பட்ட மகாராணி தானும் அங்கு குளிக்க வேண்டுமென்று ஒரு நாள் ஏற்பாடு செய்திருந்தாள். அன்று அபு ஸிர் அங்கிருந்த ஆடவர்களையெல்லாம் வெளியேற்றிவிட்டுத் தானும் வெளியே சென்றுவிட்டான். பணிப்பெண்கள் மகாராணிக்கு வேண்டிய பணிவிடைகளைக் குறைவின்றிச் செய்தனர். அவள் அங்கிருந்த வசதிகளை மெச்சி, ஆயிரம் தினார்களை அன்பளிப்பாகக் கொடுத்துவிட்டுச் சென்றாள். அதிலிருந்து அபு ஸிர், ஆடவர்கள் முற்பகலில் குளிப்பதற்கும், பெண்டிர்கள் பிற்பகலில் குளிப்பதற்கும் ஏற்பாடு செய்தான்.

நாளுக்கு நாள் ஹம்மாமின் புகழ் பெருகி வந்தது. மேலும் மேலும் அதிகமான மக்கள் அதை நாடி வந்தனர். ஏழைகள், பணக்காரர் – எவர் வரினும், அபு ஸிர் புன்முறுவலோடு அவர்களை வரவேற்று உபசரித்து அனுப்பி வந்தான். பெரிய

மனிதர்கள் பலரும் அவனுக்குப் பழக்கமாயினர். அரசர் வாரத்தில் ஒரு நாள் மட்டும் அங்கு விஜயம் செய்து குளித்து விட்டு ஆயிரம் தினார்கள் அளிப்பது வழக்கமாயிற்று.

ஒரு நாள் அரசருடைய மாலுமிகளின் தலைவர் அங்கு வந்திருந்தார். அவருக்கு அபு ஸிர்ரே வேண்டிய சௌகரியங்களையெல்லாம் செய்தான். அவர் குளித்து முடிந்தவுடன், அவன் அவருக்கு கனிகளும், பழரசமும், காப்பியும் அளித்தான். அவர் ஏதோ பணத்தை எடுத்துக் கொடுக்க முன்வந்ததைக் கண்டு, அவன் அதை ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டான். அன்று அவன் காட்டிய பெருந்தன்மை பின்னால் அவன் உயிரையே காக்க உதவிற்று.

6. வஞ்சனையால் வந்த கேடு

கனவான்கள் பலர் நகரிலே புதிதாக அமைந்த ஹம்மாமைப்பற்றிச் சாயத் தொழிற்சாலை முதலாளியான அபு கிர்ரிடம் புகழ்ந்து பேசினார்கள். 'அது பூலோக சொர்க்கம்!' என்று அதில் அமைந்துள்ள அற்புதங்களைப்பற்றி வியந்து கூறினார்கள். 'இப்படி மக்களின் மனத்தைக் கவர்ந்துள்ள குளிப்பு நிலையத்தை நாமும் ஒரு முறை பார்த்து வர வேண்டியது அவசியம். உலகம் போகிற போக்கில் நாமும் சேர்ந்தே போக வேண்டும்!' என்று அபு கிர் எண்ணமிட்டான். ஒருநாள் அவன் ஆடம்பரமான உடைகள் அணிந்துகொண்டு, குதிரைமீது அமர்ந்து, ஹம்மாமுக்குப் புறப்பட்டுச் சென்றான். அவனுக்கு முன்னால் இரண்டு அடிமைகளும், பின்னால் இரண்டு அடிமைகளும் சென்றனர்.

அவன் ஹம்மாமின் வாயிலுக்குச் சென்றதும், உள்ளே யிருந்து அகில், சந்தனம் முதலிய கட்டைகளின் நறும்புகை வந்து அவன் மூக்கைத் துளைத்தது. அவன் உள்ளே சென்றதும், பெஞ்சிகளில் கூட்டம் கூட்டமாகப் பல திறப்பட்ட மக்கள் அமர்ந்திருப்பதைக் கண்டான். அவர்களைத் தாண்டி அவன் சிறிது தூரம் சென்றதும், ஒரு மேசையடியில் அபு ஸிர் வீற்றிருப்பதைப் பார்த்தான். அவனும் இவனைக் கண்டு கொண்டான். உடனே அபு ஸிர் எழுந்து மகிழ்ச்சியோடு அவனை வரவேற்க ஓடிவந்தான். அதற்குள் அபு கிர் அவனைப் பார்த்து, "இதுதான் நண்பனுக்கு அழகோ? இதே ஊரில் நான் ஒரு சாயத் தொழிற்சாலை திறந்து நடத்தி வருகிறேன். அரசர் முதல் பலரும் அதை ஆதரித்து வருகின்றனர். இப்பொழுது நான் நல்ல நிலைமையில் செல்வமும் சிறப்பும் பெற்று விளங்குகிறேன். இவ்வளவு காலமாக நீ வந்து, 'என்ன நண்பா. சுகமா?' என்றுகூடக் கேட்கவில்லையே! உன்னைத் தேடி என் வேலையாட்களைப் பல முறை அனுப்பினேன். அவர்கள் நகரிலுள்ள விடுதிகளை யெல்லாம் சுற்றிப் பார்த்தும், உன்னைக் கண்டுபிடிக்க முடியவில்லை. நீ எங்கே சென்றாய் என்றுகூடத் தகவல் சொல்லுவார் இல்லை!" என்று சொன்னான்.

அபு ஸிர், "நான் உன்னை ஒரு முறை வந்து பார்க்க வில்லையா? என்னைத் திருடன் என்றும், போக்கிரி என்றும் ஏசி, நீ அடித்து விரட்டவில்லையா? மக்களின் முன்பு நீ என்னை மானபங்கப்படுத்தியதும் மறந்து போய்விட்டதா?" என்றான்.

"என்ன இப்படிப் பிதற்றுகிறாய் நீ? நான் உன்னையா அடித்தேன்?"

"ஆம், என்னைத்தான்!"

உடனே அபு கிர் அவனை அடையாளம் தெரியாததால் அப்படி நடந்துவிட்டதாக ஆயிரம் தடவை சத்தியம் செய்தான். "உன்னைப் போலவே ஒரு பயல் இருக்கிறான். அவன் அடிக்கடி தொழிற்சாலைக்கு வந்து துணிகளைத் திருடிக் கொண்டு போவது வழக்கம். உன்னை அவன்தான் என்று

தவறாக எண்ணிக்கொண்டு தாக்கியிருப்பேன்!'' என்றும் கூறினான். ''பல வேலைகளில் ஈடுபட்டிருந்த நான், ஞாபக மறதியில் தவறு செய்துவிட்டால், நீயாவது, 'நான் இன்னான் அல்லவா?' என்று தெரிவித்திருக்கக்கூடாதா? அடடா, என்ன பாவம் செய்துவிட்டேன்!'' என்று புலம்பிக்கொண்டே, அவன் தன் தவறுக்காக மனம் வருந்துவதுபோல் பாவனை செய்தான்.

அபு ஸிர், ''நண்பா, ஆண்டவன் உன்னை மன்னிக்கட்டும்! நான் தண்டனை அடையவேண்டும் என்று அவன் விதித்திருந்தான், அது நிறைவேறிற்று! அவ்வளவுதான்! நீ உன் உடைகளைக் கழற்றி வைத்துவிட்டு, உள்ளே சென்று, வசதிபோல் ஸ்நானம் செய்!'' என்று சொன்னான்.

''ஆண்டவன் பேரில் ஆணை, நீ என்னை மன்னித்துவிட வேண்டும்!'' என்றான் சாயக்காரன்.

''நான் யார் மன்னிப்பதற்கு? ஆண்டவன் உன்னை மன்னிப்பானாக!''

''நண்பா, உனக்கு எங்கிருந்து இவ்வளவு செல்வமெல்லாம் சேர்ந்தது?''

''உனக்கு அருளியவரே எனக்கும் அருள் புரிந்தார்; நான் அரசரிடம் ஹம்மாமைப்பற்றிப் பேசியதன் பயனாக, அவர் உடனே இந்த ஹம்மாமைக் கட்டி முடிக்க உதவி செய்தார்!''

''உன்னை அரசருக்குத் தெரிந்திருப்பது போல், என்னையும் அவர் நன்றாக அறிவார். உன்னைப்பற்றி நானும் அவரிடம் சிபாரிசு செய்து பேசுகிறேன். நீ என் நண்பன் என்பது அவருக்குத் தெரியாது; அதையும் அவரிடம் சொல்லி வைக்கிறேன்!''

''ஒரு சிபாரிசும் தேவையில்லை. மனிதருடைய உள்ளத்திலே அன்பு உணர்ச்சி தழைக்கும்படி செய்யும் ஒருவன் என்றும் அழியாமல் இருக்கிறான். அவனுடைய அருளால், அரசரும், அவருடைய அதிகாரிகளும் என்னிடம் பேரன்பு கொண்டு, பெரிய உதவிகளையெல்லாம் செய்து வருகின்றனர்!''

இவ்வாறு கூறிவிட்டு, அபு ஸிர் தன் பழைய நண்பனின் கையைப் பிடித்து உள்ளே அழைத்துச் சென்றான். அவன் உடைகளைக் களைந்த பின்பு, தானே அவனுக்குத் தைலம் தடவி, சோப்புத் தேய்த்து, குளிர்ந்த நீரில் அவனை நீராட்டி வைத்தான். குளித்து, உடைகளை அணிந்துகொண்டு அவன் வெளியே வந்ததும், அவனுக்கு உணவும் சர்பத்தும் தயாராக யிருந்தன. அவனுக்கு நடந்த மரியாதைகளையெல்லாம் பார்த்து, அங்கே இருந்தவர்கள் அனைவரும் ஆச்சரியப்பட்டனர். சாயக்காரன் வெளியே புறப்படு முன், நண்பனுக்கு ஏதேனும் கொடுக்க வேண்டுமென்று விரும்பினான். உடனே அபு ஸிர், "உன்னிடத்திலுமா நான் ஊதியம் பெறவேண்டும்? நீ என் நண்பன், நமக்குள் வேற்றுமையே கிடையாது!" என்று சொல்லி மறுத்துவிட்டான்.

அப்பொழுது அபு கிர், "என் அருமை நண்பா! உன்னுடைய ஹம்மாம் அழகாய்த்தான் இருக்கிறது; ஆயினும் இங்கு ஒரே ஒரு குறைமட்டும் இருப்பதாகத் தோன்றுகிறது" என்றான். "அது என்ன?" என்று மருத்துவன் கேட்க, அவன், 'கத்தியால் மழிக்காமலே உடலிலுள்ள உரோமங்களை அப்புறப்படுத்தும் தைலம் ஒன்று இருக்கிறது; கொஞ்சம் பாஷாணம், தாளிக்காத சுண்ணாம்பு, எண்ணெய் ஆகியவற்றைக் கலந்து வைத்தால் போதும், இதுதான் உரோம சம்ஹாரித் தைலம்! இதை நீ தயாரித்து வைத்துக்கொண்டு, அடுத்த தடவை அரசர் வரும்பொழுது, அவருடைய உடலில் தடவினால், அரசர் மிகவும் மகிழ்ச்சியடைவார்!" என்று கூறினான். பாஷாணம் கொடிய விடம் என்றோ, சுண்ணாம்பு காரமானது என்றோ அஞ்ச வேண்டியதில்லை என்றும், இரண்டையும் எண்ணெயில் கலந்தால் நல்ல தைலமாகிவிடும் என்றும் அவன் உறுதி கூறினான்.

கபடமில்லாத மருத்துவன், "அவ்வண்ணம் உடனே தைலம் தயாரித்து வைக்கிறேன்!" என்று உறுதி சொன்னான், அபு கிர், அவனிடம் விடை பெற்றுக்கொண்டு, தன் பரிவாரங்களுடன் வெளியே சென்றான்.

அவன் குதிரை மேல் ஏறிக்கொண்டு, நேரே தன் வீட்டுக்குச் செல்லாமல், அரண்மனை நோக்கிச் சென்றான். அங்கே அவன் அரசரைக் கண்டு வணங்கி, "நான் தங்களுக்கு ஓர் எச்சரிக்கை செய்வதற்காகவே அவசரமாக வந்துள்ளேன்!" என்று கூறினான்.

"என்ன எச்சரிக்கை?"

"தாங்கள் ஒரு ஹம்மாம் கட்டி வைத்திருக்கிறீர்கள் அல்லவா?"

"ஆம், வெளிநாட்டிலிருந்து வந்துள்ள ஒரு நல்ல மனிதனுக்காக அதைக் கட்டிக் கொடுத்தேன்! உனக்குச் சாயத் தொழிற்சாலை கட்டிக் கொடுத்தது போலவே, அவனுக்கும் உதவி செய்தேன். அவனுடைய ஹம்மாம் இந்த நகருக்கே அணிகலமாக விளங்குகின்றது!"

"தாங்கள் அதன் உள்ளே சென்றிருக்கிறீர்களா?"

"ஆம்."

"அப்படியானால், ஆண்டவன்தான் தங்களைக் காப்பாற்றி யிருக்கிறார்! அந்த ஹம்மாமை நடத்தும் துரோகியின் கையிலிருந்து தாங்கள் தப்பியது ஆச்சரியந்தான்!"

"அவனைப்பற்றி என்ன?"

"அரசே! தாங்கள் மறுபடியும் அந்த ஹம்மாமுக்குள்ளே சென்றால், அதுவே தங்களுடைய முடிவு காலமாகும்!"

"ஏன்?"

"அந்த ஹம்மாமை நடத்தி வருபவன் தங்களுடைய பகைவன்; அவன் நம் இஸ்லாம் மார்க்கத்துக்கும் விரோதி! தங்களுக்கு விஷம் வைப்பதற்காகவே அவன் அதை நடத்தி வருகிறான். அடுத்த தடவை தாங்கள் ஹம்மாமுக்குச் சென்றால், அவன் வைத்திருக்கும் தைலத்தை எடுத்து வருவான். அதைத் தடவினால் உரோமங்கள் தாமாகவே உதிர்ந்துவிடும் என்று சொல்லுவான். அது வெறும் தைலமில்லை, கொடிய விஷம்! தங்களை விஷம் வைத்துக் கொன்றுவிடுவதாக, அவன் வெளி நாட்டுக் கிறிஸ்தவ அரசன் ஒருவனுக்கு வாக்களித்துவிட்டு, இங்கே வந்திருக்கிறான். அவனுடைய மனைவியையும், மக்களையும் அந்த அரசன் பிடித்து வைத்திருக்கிறான். தங்களை அழித்தால்தான், அவ்வரசன் அவர்களை விடுதலை செய்வான். நானும் அவனோடு அந்த அரசனின் காவலில் இருந்தவன்தான். சாயம் காய்ச்சும் என் திறமையைக் கொண்டு, நான் அவனிடம் முன்னதாக விடுதலை பெற்றேன். அவன் எனக்குப் பின்னால், இந்தக் கொடிய நோக்கத்தை மேற்கொண்டு வந்து, ஹம்மாம் ஒன்றையும் நடத்தி வருகிறான். நான் இன்று அங்கு குளிக்கப் போயிருந்த சமயம், அவனே நேரில் என்னிடம் இந்தச் செய்திகளையெல்லாம் தெரிவித்தான்; என்னைக் காத்துக் கைதூக்கிவிட்ட வள்ளலாகிய தங்களுக்கு எவ்வித ஆபத்தும் நேர்ந்துவிடக்கூடாதே என்ற கவலையால் ஓடோடி வந்துள்ளேன்!"

"சரி, நீ இந்த விஷயத்தை இரகசியமாக வைத்துக்கொள்; வெளியே யாருக்கும் சொல்ல வேண்டாம்!"

மறுநாள் மன்னர் ஹம்மாமுக்குச் சென்றார். சாயக்காரன் சொல்லியது போலவே, அபு ஸிர் ஒரு புட்டியில் தான் தயாரித்து வைத்திருந்த தைலத்தை எடுத்துவந்து, அது உரோமங்களை அகற்றக்கூடிய தைலம் என்று கூறினான். அரசர் புட்டியைத் திறந்து முகர்ந்து பார்த்தார். அதில் பாஷாணம் கலந்திருப் பதைக் கண்டு, புட்டியைக் கையில் எடுத்து மறைத்து வைத்துக் கொண்டு, கடுங்கோபத்துடன் அவர் அரண்மனைக்குச் சென்றுவிட்டார்.

திவானில் அமர்ந்துகொண்டு. அரசர் காவலரை ஏவி, அபுஸிர்ரை உடனே பிடித்து வரும்படி உத்தரவு செய்தார். அவர்கள் அவன் கைகளைப் பின்புறமாகக் கட்டிக்கொண்டு வந்து, அவனை அரசர் முன்பு நிறுத்தினார்கள். அப்பொழுதும் மன்னர் கோபத்தால் கொதிப்படைந்திருந்தார். ஆனால், அவருடைய கோபத்திற்கு என்ன காரணம் என்பது ஒருவருக் கும் தெரியவில்லை. அவர் தமது மாலுமிகளின் தலைவரை அழைத்து, அபு ஸிர்ரை அவரிடம் ஒப்படைத்தார். "இவனை ஓர் ஓடத்திலே ஏற்றி, ஒரு கோணிக்குள் இவனை வைத்து, மேலே தாளிக்காத சுண்ணாம்புக் கற்களை நிறையப் போட்டு, கோணியின் வாயைக் கட்டி, நமது அரண்மனையின் அருகில், கடலிலே தள்ளிவிட வேண்டும்!" என்று கட்டளையிட்டார். கோணியைக் கடலில் தள்ளும்பொழுது தாம் சாளரத்தின் வழி யாகப் பார்த்துக்கொண்டிருக்கப்போவதாகவும் அவர் தெரி வித்தார்.

"உத்தரவுப்படியே!" என்று சொல்லிவிட்டு, மாலுமிகளின் தலைவரான கப்பித்தான் அபு ஸிர்ரை அழைத்துக்கொண்டு சென்றார்.



7. சாயக்காரரின் சாயம் வெளுத்தது

அரண்மனைக்கு எதிரே ஒரு சிறு தீவு இருந்தது. மாலுமி யின் தலைவர் அபு ஸிர்ரை அங்கே அழைத்துச் சென்றார். அங்கே கரை சேர்ந்த பின்புதான், அவர் அவனிடம் பேசத் தொடங்கினார். "எனக்கு முன்பு ஒரு நாள் ஹம்மாமில் நீர் செய்த உபசாரங்கள் எல்லாம் என் நினைவிலிருக்கின்றன. உம்மைப்பற்றி இத்தனை நாளும் மகிழ்ச்சியோடு எண்ணிக் கொண்டிருந்தேன். உமக்கு இந்தக் கதி எப்படி ஏற்பட்டது? மன்னருக்கும் உமக்கும் இடையிலே என்ன நடந்தது? நீர் என்ன கொடுமையான காரியத்தைச் செய்ததில், அரசருக்கு இவ்வளவு கோபம் வந்துவிட்டது?" என்று பல கேள்விகள் கேட்டார்.

அபு ஸிர், "நான் ஒன்றுமே செய்யவில்லை, இத்தகைய தண்டனைக்குரிய குற்றம் எதையும் நான் செய்ததில்லை! நான் நிரபராதி!" என்று சொன்னான்.

மாலுமிகளின் தலைவரும் அவன் நிரபராதியாகவே இருப்பானென்று நம்பினார். அவர் கூறியதாவது: "அரசரிடத்தில் உமக்கு வேறு எவருக்கும் இல்லாத செல்வாக்கு இருந்து வந்தது. உம்முடைய அதிருஷ்டத்தையும் செல்வத்தையும் கண்டு பொறாமை கொண்ட எவனோ, மன்னரிடம் உம்மைப் பற்றிக் கோள் சொல்லி, அவர் மனத்தில் சந்தேகத்தை உண்டாக்கியிருக்கவேண்டும். அதனால் அவர் உம்மிடத்தில் அளவு கடந்த கோபம் கொண்டுவிட்டார். ஆயினும், நீர் கவலைப்பட வேண்டாம்! உமக்கு ஒரு தீங்கும் நேராது! முன் பின் பழக்கமில்லாத என்னிடம் நீர் காட்டிய அன்புக்குக் கைம்மாறாக, நான் உம்மை விடுதலை செய்கிறேன்! ஆனால், நீர் இந்தத் தீவில் என்னுடனேயே இருக்க வேண்டும். உம்முடைய நாட்டிற்குச் செல்லக்கூடிய கப்பல் ஏதாவது இந்தப் பக்கம் வரும்வரை, நீர் என் விருந்தாளியாக இருந்துவிட்டு, பிறகு, வெளியே யாருக்கும் தெரியாமல், கப்பலில் ஏறி உமது தாயகத்திற்குச் செல்லலாம்!"

அபு ஸிர் அவருடைய கையை முத்தமிட்டு, பன்முறை அவருக்கு நன்றி கூறினான்.

பின்னர், மாலுமிகளின் தலைவராகிய கப்பித்தான் ஒரு கோணி நிறையச் சுண்ணாம்புக் கற்களை அடைத்துக் கொண்டு, ஓடத்திலேறி, அரண்மனைப் பக்கம் செல்லுவதற்குத் தயாரானார். அப்பொழுது அவர் மருத்துவனைப் பார்த்து, "ஒவ்வொரு நாளும் நான் இங்கிருந்து மீன் பிடித்து அரண்மனைக்கு அனுப்புவது வழக்கம். இன்று என் மனமே சரியாயில்லை. அரண்மனை ஏவலாளர்கள் வந்து மீன்கள் இல்லாமல் வெறுங்கையோடு திரும்பவேண்டியிருக்கும். நீர் இதோ இருக்கும் வலையை எடுத்துக்கொண்டு கடல் ஓரத்திலே கிடைக்கும் மீன்களைப் பிடித்துக்கொண்டிரும். இடையில் நான் இந்தக் கோணியைக் கொண்டுபோய், அரண்மனைக்கு எதிரில் கடலிலே போட்டுவிட்டு வருகிறேன். அரசர் உம்மையே கோணியில் அடைத்துக் கடலில் தள்ளுகிறேன் என்று எண்ணிக் கொள்ளட்டும்! ஆண்டவன்தான் எனக்குத் துணை நிற்க வேண்டும்!" என்று கூறிச் சென்றார்.

ஓடம் அரண்மனைப் பக்கம் சென்றதும், மேல் மாடத்தில் ஒரு சாளரத்தின் அருகில் அமர்ந்திருந்த அரசரைக் கப்பித்தான் கண்டு வணங்கினார். "இவனைக் கடலில் தள்ளி விடட்டுமா?" என்று அவர் மன்னரிடம் கைகளால் சாடை காட்டிக்கொண்டே கேட்டார். மன்னர், "தள்ளிவிடும்!" என்று வாயால் கூறியதுடன், தம் வலக்கையை வெளியே வீசிச் சாடையும் காட்டினார். அப்பொழுது அவர் கையிலிருந்து பளபளப்பாக மின்னிக்கொண்டிருந்த ஒரு பொருள் கடல் நீரில் விழுந்தது. அது அவருடைய முத்திரை மோதிரம்! அத்துடன் அது மந்திர சக்தியுள்ளது. அந்த மோதிரம் விரலில் இல்லாவிட்டால், அரசர் நெடுநேரம் ஆட்சி செய்ய முடியாது. படை வீரர்கள் அவருடைய ஆணைக்குப் பணியமாட்டார்கள். அவர்கள் அவரையே வதைத்துவிடுவார்கள்! அந்த மோதிரத்தைக் கையில் அணிந்துகொண்டிருக்கையில், எவரும் மன்னரை எதிர்க்க முடியாது. அவர் அம்மோதிரத்தை எதிரிக்கு நேரே நீட்டினால், அதிலிருந்து ஓர் ஒளி கிளம்பி, எதிரியைக் கொன்று விடும். அத்தகைய அபார ஆற்றல் வாய்ந்த ஆழி கடலில் வீழ்ந்துவிட்டதில் அரசர் தமது ஆவியே ஒழிந்துவிட்டதாக எண்ணி வருந்தினார். ஆயினும், அது தொலைந்துவிட்டதை வெளியே எவருக்கும் சொல்லாமல், அவர் மறைத்துக்கொண்டார். ஆனால், மாலுமிகளின் தலைவர் ஒளியுடைய மந்திர மோதிரம் கடலில் விழுந்ததை முன்பே கவனித்துக்கொண்டார்.

இதற்கிடையில் அபு ஸிர் கடலில் வலை வீசியதில் ஏராளமான மீன்கள் கிடைத்திருந்தன. அவன் அவைகளைக் கரையிலே கூடைகளில் சேர்த்து வைத்திருந்தான். அவனும் பல நாட்களாக மீன் கறி உண்ணாதிருந்ததால், தனக்கும் கப்பித்தானுக்குமாக நல்ல மீன்களாகச் சிலவற்றை ஒதுக்கி வைத்துக்கொண்டான். அவைகளிலே ஒரு பெரிய மீனை எடுத்து, அவன் அதைக் கத்தியால் பிளந்தான். கத்தி ஏதோ உலோகத்தில் தட்டுவதுபோல் ஓசை கேட்டதும், அவன் மீனின் உடலுக்குள் உற்றுப் பார்த்தான். ஒளி மிகுந்த தங்க மோதிரம் மீன் வயிற்றில் இருப்பதைக் கண்டு, அவன் அதை வெளியே எடுத்துத் தன் வலக்கை விரல் ஒன்றில் அணிந்துகொண்டான்.

அந்த நேரத்தில் மீன் வாங்கிப் போவதற்காக அரண்மனையிலிருந்து இரண்டு இளைஞர்கள் அவனிடம் வந்து, ''கப்பித்தான் எங்கே?'' என்று கேட்டனர். அவன் தனக்குத் தெரியாதென்று சொல்லி, அவர்கள் முன்பு தன் வலக்கையை நீட்டிப் பேசினான். அவனுடைய விரலிலிருந்த மோதிரத்தின் ஒளி பட்டு, இளைஞர் இருவரும் மடிந்து கீழே விழுந்துவிட்டனர். அந்த விபரீதத்தைக் கண்டு, அபு ஸிர் மிகவும் துக்கமடைந்து தவித்துக்கொண்டிருந்த வேளையில், கப்பித்தானும் வந்து சேர்ந்தார்.

அவர் தூரத்தில் வரும்பொழுதே அவனுடைய கையில் மின்னிக்கொண்டிருந்த மோதிரத்தைக் கவனித்துவிட்டார். அவனுக்கு எதிரில் இளைஞர்கள் இறந்து கிடந்ததையும் கண்டு, அவர் அந்த மோதிரம் அரசருடைய மந்திர மோதிரமே என்பதைத் தெரிந்துகொண்டார். அவர் அபு ஸிர்ரின் அருகில் வரும்பொழுது, மோதிரத்தைத் தமக்கு எதிரில் நீட்டாமல் மறைத்து வைத்துக்கொள்ளும்படி கூறினார்.

அவர் அருகில் வந்த பின், அபு ஸிர் மீன் வயிற்றிலிருந்து மோதிரம் இருந்த விவரத்தை கூறினான். அப்பொழுது கப்பித்தான் தாம் கோணியைக் கடலிலே போடுமுன், அரசர் கையிலிருந்து அம்மோதிரம் கடலில் விழுந்ததைத் தாம் கண்டதாகச் சொல்லிவிட்டு, அந்த ஆழியின் அற்புத ஆற்றல்களையும் அவனுக்கு விளக்கினார். "இனிமேல் கவலையில்லை. அரசராலும்கூட இனி உம்மை எதிர்த்து நிற்க முடியாது! இதை வைத்துக்கொண்டு நீர் எவரையும் வென்று அழிக்க முடியும்!" என்று அவர் தெரிவித்தார்.

அதைக் கேட்ட மருத்துவன், தன்னை நகரத்திலே கொண்டு சேர்க்கும்படி அவரைக் கேட்டுக்கொண்டான். அவரும், "அப்படியே செல்லுவோம்! இனி நாம் எவருக்கும் அஞ்சவேண்டியதில்லை!" என்று சொல்லி, ஓடத்தைத் தயாராகக் கொண்டுவந்தார். இருவரும் நகரை அடைந்தனர்.

அபு ஸிர் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு, அரண்மனைக்குச் சென்று, மன்னரைக் கண்டு வணங்கினான். அவனைப் பார்த்ததும், அரசர் வியப்படைந்து, "கடலிலே ஆழ்த்தப்பட்ட நீ எவ்வாறு தப்பி வந்தாய்?" என்று வினவினார். அவன் நடந்த வரலாற்றைக் கூறினான். கள்ளம் கபடமற்ற தன் தன்மையை உணர்ந்து கப்பித்தான் தன்னைக் காப்பாற்றினார் என்றும், கடைசியாகத் தான் மீன் வயிற்றிலிருந்து மந்திர மோதிரத்தை எடுத்த விவரத்தையும் அவன் சொல்லி, "இந்தக் கணையாழியைக் கொண்டுவந்து சமூகத்தில் சேர்ப்பதற்காகவே நான் வந்துள்ளேன், எடுத்துக் கொள்ளுங்கள்! நான் தங்களுக்கு விரோதமாக ஏதாவது செய்திருந்தால் அதை வெளிப்படையாகக் கூறி, எனக்கு மரண தண்டனை அளியுங்கள், நான் ஏற்றுக்கொள்ளத் தயாராயிருக்கிறேன்!" என்று கூறியவண்ணம், தன் கையிலிருந்த மோதிரத்தைக் கழற்றி அரசரிடம் அளித்தான். அரசர் அந்த மோதிரத்தின் ஆற்றலெல்லாம் தெரிந்திருந்தும், அவன் அதை விசுவாசத்தோடு தம்மிடம் கொண்டுவந்து சேர்த்ததை எண்ணி, அவன் நிரபராதி என்பதைக் கண்டு அன்புடன் அதை வாங்கி, தம் விரலில் அணிந்துகொண்டார். அப்பொழுதுதான், பிரிந்த உயிர் மீண்டும் உடலுக்கு

புகுந்தது போல், அவர் கவலை நீங்கி, ஊக்கமும் உற்சாகமும் பெற்று விளங்கினார். பிறகு அவர் தம் இருக்கை விட்டு எழுந்து, மருத்துவனைத் தம் மார்போடு சேர்த்து அணைத்துக்கொண்டு, "நீ மேன்மக்கள் எல்லோரிலும் மேலானவன். உனக்கு நான் செய்த தவறுக்காக நீ என்னை மன்னிக்கவேண்டும்! உன்னைத் தவிர வேறு எவன் கையில் இந்த மோதிரம் சிக்கியிருந்தாலும், அவன் ஒருகாலும் இதை என்னிடம் கொடுத்திருக்க மாட்டான்!" என்று அவனை மனமாரப் பாராட்டினார்.

அப்பொழுது அபு சிர், "அரசர் பெருமானே! நான் தங்களை மன்னிக்க வேண்டும் என்று சொல்லுகிறீர்களே! என்னைக் கொன்றுவிடும்படி தாங்கள் உத்தரவிடும் அளவுக்கு நான் செய்த குற்றம் என்ன என்பதைத் தயவு செய்து சொல்லுங்கள்!" என்று கேட்டான். அரசர், "இப்போது நீ செய்த செயலிலிருந்து, நீ எப்பொழுதுமே எவ்விதக் குற்றமும் செய்ததில்லை என்பதையும், நீ நிரபராதி என்பதையும் நான் உணர்ந்துகொண்டேன். அந்தச் சாயக்காரன் என்னிடம் ஓடி

வந்து சொன்ன அபாண்டங்களால் இவ்வளவும் விளைந்து விட்டன!" என்று கூறி, அபு கிர் தம்மிடம் கூறிய வசனங்களையும், தாம் ஹம்மாமில் தைலத்தைக் கண்டதும் அடைந்த சந்தேகத்தையும் விவரித்தார்.

அபு ஸிர் தான் விளக்க வேண்டிய விஷயங்களைக் குறிப்பாக எடுத்துக் கூறினான். அரசருக்குச் சந்தேகத்தை உண்டாக்கிய தைலத்தைத் தயாரித்து வைக்கும்படி தனக்குக் கூறியது அபு கிர்தான் என்று அவன் குறிப்பிட்டான். தன்னைத் தைலம் தயாரிக்கும்படி சொல்லிவிட்டு, அரசரிடம் உடனே போய்த் தைலம் ஆபத்தானது என்று சொல்லி, சாமர்த்தியமாக அபு கிர் செய்த வஞ்சனையை அவன் அம்பலப்படுத்தினான். மேலும், அந்தத் தைலத்தால் உடலுக்குக் கேடு ஒன்றும் விளையாது என்றும், தன் நாட்டில் அதே போல் தயாரித்து மக்கள் உபயோகிப்பது வழக்கம் என்றும் அவன் எடுத்துக் காட்டினான். பின்பு, அவனும் அபு கிர்ரும் அலெக்சாந்திரியாவிலிருந்து புறப்பட்டு, பிழைப்புத் தேடி அந்த நகரத்திற்கு வந்ததையும், தொடக்கத்தில் தாங்கள் ஒருவருக்கொருவர் உதவி செய்துகொள்வதற்காகச் செய்துகொண்ட ஒப்பந்தத்தையும், கப்பலிலும் நகரிலும் தான் அவனுக்குச் செய்த உதவிகளையும், தான் விடுதியில் நோயுற்று நினைவேயில்லாமல் கிடந்த சமயத்தில் அவன் தன் பணத்தைத் திருடிக்கொண்டு ஓடியதையும், பின்னால் சாயத் தொழிற்சாலையில் அவன் தன்னை அநியாயமாக அடித்து விரட்டியதையும் அவன் விவரித்தான். தான் ஒரு கிறிஸ்தவ மன்னரின் கையாள் என்று அபு கிர் மன்னரிடம் சொன்னது பச்சைப் பொய் என்றும், தன் நாட்டைத் தவிர, தனக்கு வேறு நாடே தெரியாது என்றும் சுட்டிக் காட்டினான்.

மன்னர், அபு ஸிர் முன்பு தங்கியிருந்த விடுதியின் வேலைக்காரனையும், அபு கிர்ரின் சாயத் தொழிற்சாலையில் வேலை பார்த்து வந்த ஊழியர்களையும் அழைத்துவரச் சொல்லி, அவர்களையெல்லாம் ஐயம் தீர விசாரித்தார். விடுதியில் அபு கிர் ஒருவருக்கும் தெரியாமல் பணத்தைச் சுருட்டிக்கொண்டு ஓடியதையும், தானே தன் செலவில் அபு

ஸிர்ரைப் பல நாள் காப்பாற்றி வந்ததையும் வேலைக்காரன் நிரூபித்தான். தொழிற்சாலையில் அபு ஸிர்ரைக் கண்டதும் அபு கிர் அவனை ஏசி, அவனைப் பிடித்துக் கீழே தள்ளச் சொல்லித் தன் கழியால் முதுகிலும், மார்பிலும், வயிற்றிலும் கொடுமையாக அடித்ததற்குத் தொழிற்சாலை ஊழியர்கள் சாட்சியம் கூறினார்கள்.

பிறகு, மன்னர் அபு கிர்ரை அழைத்து வரும்படி காவலர் களை ஏவி, "கால்களில் பாதரட்சையில்லாமல், தலையில் தலைப்பாகை இல்லாமல், இரண்டு கைகளையும் முதுகுப் புறத்தில் சேர்த்துக் கட்டி அவனை இங்கே இழுத்து வாருங் கள்!" என்று சொன்னார். காவலர்கள் அவன் வீட்டிற்குச் சென்ற சமயம், அவன் ஓர் ஆசனத்தில் சாய்ந்துகொண்டு, அபு ஸிர் மடிந்துவிட்டான் என்று எண்ணி மகிழ்ந்துகொண் டிருந்தான். அப்பொழுது திடீரென்று அவர்கள் பாய்ந்து, அவனைக் கட்டி இழுத்துக்கொண்டு சென்றனர். அவன் திவானுக்குள் கொண்டுவரப்பட்டதும் அரசரின் அரியணைப் பக்கம், ஓர் ஆசனத்தில் அபு ஸிர்ரும் அமர்ந்திருப்பதை அவன் கண்டான்.

அவன் செய்த, வஞ்சனைகளுக்காக அவனுக்கு மிகக் கொடிய தண்டனை விதிக்க வேண்டும் என்று அரசர் தீர் மானித்தார். "இவனை நகரம் முழுவதிலும், முக்கியமாகக் கடை வீதிகளின் வழியாக இழுத்துச் சென்று, சுண்ணாம்புக் கல்லுள்ள ஒரு கோணியில் இவனை வைத்துக் கடலிலே எறிந்துவிடுங்கள்!" என்று அவர் தம் காவலர்களுக்குக் கட்டளையிட்டார். அப்பொழுது அபு ஸிர், "நான் அவனை மன் னித்து, அவன் செய்த தீவினைகளையெல்லாம் மறந்துவிடு கிறேன்! தயவுசெய்து அவனைத் தண்டிக்க வேண்டாம்!" என்று கேட்டுக்கொண்டான்.

அரசர், "நீ மன்னித்துவிடலாம், ஆனால், அரசுக்கு எதி ராக அவன் செய்துள்ள குற்றங்களை நான் மன்னிக்க முடியாது!" என்று கூறிவிட்டார்.

உடனே அபு கிர்ரைக் காவலர்கள் இழுத்துச் சென்று, கோணியில் சுண்ணாம்புக் கல்லுடன் அவனையும் சேர்த்துக் கட்டிக் கடலிலே எறிந்தார்கள். நயவஞ்சகனான அப்பாத கனுக்கு இவ்வாறு இரட்டை மரணம் ஏற்பட்டது! நீரிலே மூழ்கியும், சுண்ணாம்பின் வெம்மையிலே வெந்தும் அவன் மடிந்தான்!

அபு ஸிர் மேற்கொண்டு தான் அந்த நகரத்தில் இருக்க விரும்பவில்லை; தன் தாயகம் திரும்ப வேண்டும் என்று அவன் மன்னரிடம் தெரிவித்துவிட்டான். அவர் அவனையே தம் முதல் விஜியராக* நியமிக்க வேண்டும் என்று ஆசை கொண்டிருந்தார். அது நிறைவேறாததில் அவருக்கு வருத் தந்தான். ஆயினும், பரிசுத்தமான உள்ளம் படைத்த அபு ஸிர், தன் நாட்டுக்குத் திரும்பி, உற்றார் உறவினருடன் சுகமாக வாழ்ந்திருக்கட்டும் என்று அவரும் விரும்பினார். அவன் கேட் டதையெல்லாம் அளிக்க வேந்தர் தயாராயிருந்தார். ஆனால் அவனோ, தான் ஊருக்குச் செல்லும் அனுமதி ஒன்றையே வேண்டினான். வேந்தர் ஒரு கப்பல் நிறைய அரிய பொருள் கள் பலவற்றையும், பெருநிதிகளையும் ஏற்றிவைத்து, அவைகளோடு கப்பலையும், மாலுமிகளையும், வேலையாள்

* விஜியர் - மந்திரி.

களையும் அவனுக்குப் பரிசாக அளித்தார். அவன் மிகுந்த வருத்தத்துடன் அவரிடம் விடை பெற்றுக்கொண்டு புறப் பட்டான்.

ஒரு காலத்தில் வறுமையிலே வாடி வருந்திக்கொண்டிருந்த அபு ஸிர் இப்பொழுது சொந்தக் கப்பலில் சுகமாக யாத்திரை செய்துகொண்டிருந்தான்! அவன் வழியில் எந்தத் துறை முகத்திலும் இறங்காமல், கப்பலை நேரே அலெக்சாந்திரியா வுக்குச் செலுத்தும்படி சொல்லியிருந்தான். கப்பல் உலகப் புகழ்பெற்ற அந்தப் பெருநகரை அடைந்ததும், அவன் கீழே இறங்கினான். அப்பொழுது சில மாலுமிகள் கரையோரமாக ஒதுக்கப்பட்டிருந்த ஒரு பெரிய கோணி மூட்டையை எடுத்து வந்து அவிழ்த்துப் பார்த்தனர். அதனுள் இருந்தவை அபு கிர்ரின் அஸ்திகள் முதலிய அங்கங்கள் என்பதை அபு ஸிர் தெரிந்துகொண்டான். அவையும் கடலிலே மிதந்து மிதந்து கடைசியாக அலெக்சாந்திரியாவுக்கே வந்துவிட்டதைக் கண்டு, அவன் அவைகளை எடுத்து முறைப்படி கரையில் அடக்கம் செய்துவிட்டுத்தான் நகருக்குள்ளே சென்றான்.

அபு கிர்ரின் சமாதியைச் சுற்றியுள்ள கடலுக்கு அது முதல் 'அபு கிர் வளைகுடா' என்றே பெயர் ஏற்பட்டது.

ஏஷியன் அச்சகம், சென்னை - 600 014.